# போலீஸ் பார்வை

POLICE PARVAI

மாத இதழ்

நல்ல விதைப்பு நலம் காக்கும் மாகும்

• மலர்-11 • Volume-11 • இதழ்-4 • Issue-4 • பிப்ரவரி-2026 • Febraury -2026 • விலை ரூ.15/- • Rs.15/-

POLICE PARVAI NEWS WEB TV E_Book: www.policeparvai.com


## தமிழக அரசு ஊழியர்களின் அரசாணைகள்






## அனைத்து தரப்பினரும் பயன்பெறும் பட்ஜெட்



## தென் மண்டல I.G. திரு:விஜயேந்திர பிதாரி IPS அவர்கள் தலைமையில் ஆய்வுக் கூட்டம்


## டெலிகிராமில் ஏமாற்றி பணம் பறித்தவர்கள் கைது



மிக முக்கிய குறிப்பு, இது மருந்தல்ல, உணவு..



www.policeparvainews.com இணைய தளத்தில் செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம்...



இந்த 3 ராசிகள் மிகவும் கவனமா இருக்கணும்.! கஷ்ட காலம் ஆரம்பம்.!



















தமிழர் திருநாளாம் தைப் பொங்கலை முன்னிட்டு திருச்சி கிராப்பட்டி 'லெஜன்ட் கய்ஸ்' இளைஞர் மன்றம் நடத்திய விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு 'போலீஸ் பார்வை' குழுமம் சார்பாக பரிசுகள் வழங்கபட்டன. விழாவில் சிறப்பு விருந்தினர்களாக 'போலீஸ் பார்வை' குழுமத்தின் ஆசிரியரும் வெளியீட்டாளருமான Dr.N.பாலகிருஷ்ணன், முதன்மை ஆசிரியர் K.ராம்சுரேஷ், K.T.சிவகுமார் மற்றும் N.ராக்கேஷ் சுப்ரமணியன் ஆகியோர் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினர். விழாவில் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். விழாவுக்கான ஏற்பாடுகளை 'லெஜன்ட் கய்ஸ்' மன்றத்தினர் செய்திருந்தனர்.

# போலீஸ் பார்வை

பிப்ரவரி 2026 மலர் 11 இதழ் 4



**அச்சிட்டு வெளியிடுபவர்** : ஆசிரியர் **Dr.N.பாலகிருஷ்ணன்**

**ஆன்மீக ஆலோசகர்** : Dr.M.பாலகிருஷ்ணன் சுவாமி

**கௌரவ ஆசிரியர்** : நினைவில்... புலவர் தியாக சாந்தன்

**முதன்மை ஆசிரியர்கள்** : S.முருகானந்தம், K.ராம்சுரேஷ், K.T.சிவக்குமார் B.A.,B.L., மரு.கண்ணன்

**துணை ஆசிரியர்கள்** : N.இளங்கோவன், G.ஹரிகிருஷ்ணன், N.ஜீவானந்தம், B.சம்பத், G.ஸ்ரீனிவாசன், R.வெங்கடேஷ், V.பிரபு, S.சுந்தர்

**இணை ஆசிரியர்கள்** : K.ரவிச்சந்திரன், U.மதனகோபால், K.மனோஹரன், K.K.ஞானேஸ்வரன்

International Legal advisor : **Ramachandran Saravanan B.A.,LLB., D.L.L..,LLM**

**சட்ட ஆலோசகர்கள்** : S.கோபாலமணிகண்டன் B.A., B.L., ML., மதுரை ஐகோர்ட், P.V.பிரகாஷ் B.A., B.L., V.சிவக்குமார் M.A., B.L. சென்னை ஐகோர்ட், Dr.V.S.முகம்மது சலீம் M.A., L.L.B., S.அண்ணாதுரை M.A., B.L., P.பார்த்திபன் M.Com., B.L., M.சபிதா BBA., B.L., S.ரவிச்சந்திரன் M.A., B.L, K.அருணாச்சலம் B.Com., LLB

**சிறப்பு ஆலோசகர்** : S.செயத்அலி B.Sc., LLB.,

**தலைமை நிருபர்கள்** : S.வேல்முருகன், I.சகாயராஜ், P.பிரஸ்டன், K.பாபு I.கண்ணன், N.ஹரிதாஸ், மணிகண்டன் முருகதாஸ், N.ராக்கேஷ் சுப்பிரமணியன், K.கோவர்த்தனகிரி, S.ரமேஷ், A.மாரிராஜா, P.ஜெகதீஷ், M.பாண்டியராஜன், J.ஜெயவேல்முருகன்,

**சிறப்பு நிருபர்கள்** : V.Vivek Bomb, N.முரளிதரன், P.முத்துகுமரன், B.பாஸ்கரன், R.சக்திவேல், K.ரவிகிருஷ்ணன், Dr.A.S.முகமது ஹுசேன், M.சசி, P.கௌரிஷங்கர், G.அழகுராஜ், S.மணிகண்டன், J.பீமராஜ், LNK.சந்தன், B.குணசேகரன், R.பழனிச்சாமி, R.மணிமாறன், M.வெங்கடேசலு, குரு.சரவணன்

**நிருபர்கள் குழு** : G.பாபு, K.ராஜசேகர், S.ராமச்சந்திரன், B.சிவக்குமார், B.சத்தியராஜ், R.சக்திவேல், R.குப்புசாமி, N.ராமசாமி, A.பெனியல்தேவபிரபு, S.சந்திரசேகரன், M.ரகு, N.சீனிவாசன், S.சிவக்குமார், S.ஜெயச்சந்திரன், R.வசந்த், R.விஷ்ணுமோன், D.ஹரிஹரன், V.ஸ்ரீனிவாசராவ், E.பால்ராஜ், C.பாண்டியன், S.பாலமுருகன், K.இந்திரகுமார், A.ஜெயச்சந்திரன், G.சிவப்பிரகாசம், Dr.D.வெங்கடேஷ்வரா, H.நீலகண்டன், J.செல்வம், S.சிந்தாமணி விநாயகர், K.ரகு, U.தியாகராஜன், S.சரவணன், S.சிவராஜ், குஷால் K ஷர்மா, G.சதீஷ்குமார், Dr.S.ஹரிநாராயணன், K.A.சுரேஷ் கிருஷ்ணா, D.திவாகர், T.ஜெயபிரகாஷ், M.மணிவண்ணன், G.ராமமூர்த்தி, S.ஸ்ரீனிவாசன், M.சேகர், V.K.கண்ணன், P.அண்ணாமலை, N.மோஹனா, A.பாலமுருகன், V.சதிஷ், C.விஜயகுமார், D.லெட்சுமணன், R.தியாகராஜன், H.சுஜித்குமார், S.ஆனந்த், R.ராமநாதன், P.கருப்புசாமிபாண்டியன், U.செல்வகுமார், M.ஆனந்தகுமார், K.தங்கராஜ், T.ஆனந்த்குமார், M.முத்துசாமி, C.சிவகுருநாதன், AK.ஷாஜதா, R.கோவிந்தசாமி, P.அசோக்குமார், S.விக்னேஷ், S.நவீன், M.ராஜகோபால், T.ஆலன்பே, B.சையத் முகமது மீரான், P.மணிமாறன், B.ரமேஷ்குமார், P.மஹேந்தர் புரோகித், R.கண்ணன், S.மணி, K.பாண்டியன், A.தண்டபாணி, G.சஜிக்குமார், C.இளங்கோ, V.முருகேசன், S.ஹரிஹரன் (எ) அய்யப்பன், SR.சுந்தரவேலு, L.பிரகாஷ், L.கலைவாணன், V.சண்முகராஜ், M.கவுசர், S.தியாகராஜன், R.சுமதி, A.குமரன், P.சதீஷ், R.ராஜேஷ், K.மாமுண்டிராஜன், M.மாதேஸ்வரன், S.லிங்கதுரை, AR.முருகேசன், R.ஸ்ரீதர், R.ராமலெக்ஷ்மி, R.ராகவேந்திரன், G.சதீஷ்குமார், P.தணிகைவேல், P.நடராஜ், G.நந்தகுமார், S.ஆனந்த்குமார், K.சுரேஷ்குமார், B.பிரேம்குமார், J.ஆண்டன் ஆன்ரூஸ் கிஷோர், G.V.ஜெகதீசன், M.சஞ்சய், V.லெட்சுமணன், P.ஆறுமுகம், A.அலெக்ஸ், B.ஸ்ரீனிவாசன், V.கஜபதி, B.வெங்கடாசலம், P.தேவராஜ், SP.முகேஷ், ஷானவாஸ் அஹமத், A.அப்துல்காதர், முத்து ஜெயசேகர், M.முருகேசன், G.மணிகண்ட பிரபு, A.லியோ கிளமன்ட், S.அன்வர்தீன்,L.லூயில்பெர்ணான்டஸ், P.ராஜராமகிருஷ்ணன்,R.தங்கபாண்டியன், R.கோபாலகிருஷ்ணன், V.ஆறுமுகச்சாமி, M.ஆறுமுகம்,M.ரவி,S.சக்திவேல், K.கோபி, K.மாரிமுத்து, P.மணிகண்டன், S.கஜேந்திரவேல், E.கார்த்திக், SP.விமலேஸ்வரன், S.ரவிச்சந்திரன், N.நபிமுகமது, குரு.சரவணன், V.கணேசன், R.வெங்கடேசன், V. ராதாகிருஷ்ணன், A.தாமஸ் அந்தோணி, B,மாரிமுத்து, I.வேளாங்கண்ணி, N.ராஜ், S. ஜானகி, A.மகேந்திரன், S.விக்னேஷ், K.தர்மராஜ்(எ)பாலாஜி, K.S.அசோகன், C.பரமசிவம், R.செந்தில்குமார்,A.சரவணன், S.பாலாஜி, S.நவநீத கிருஷ்ணன், K.செல்வ நயினார், K.விமல்ராஜ், R.ஜோதிபாசு, K.சதீஷ்குமார், R.நந்தகுமார், J.மணிகண்டன், S.வெங்கடேஷ், V.சுகுமாரன், K.பில்லர், R.சங்கர், Dr.J.காந்தியப்பன், S.ஜெயந்தி செல்வம், V.வேல்முருகன், S.தினேஷ்குமார்



**அலுவலக முகவரி: 4B, GD.Floor, 4th Block Adilti Paradise, No.1, 2nd North Street, Poombuhar Nagar, Kolathur, Chennai-600 099. Cell: 9789491438, 7667551542 E.mail: editorpoliceparvai@gmail.com, Website.www.policeparvai.com**



All Rights Reserved Legal Jurisdiction Chennai City Court Only


● தலையங்கம்



# அனைத்து தரப்பினரும் பயன்பெறும் பட்ஜெட்

## மத்திய நிதியமைச்சர் சீதாராமன் 9-வது முறையாக தாக்கல் செய்தார்

*இந்தியாவில் முதல் முறையாக தொடர்ந்து 9-வது முறையாக் பட்ஜெட் தாக்கல் செய்த பெருமை மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்களையே சாரும்.குடியரசு தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர். 2026 -2027 நிதி ஆண்டிற்கான இந்த பட்ஜெட் அனைத்து தரப்பினரும் பயன்பெறும் வகையில் உள்ளது என பொருளாதார வல்லுனர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். முதலாவதாக தனிநபர் வருமான வரி விகிதத்தில் எந்த மாற்றமும் இல்லை, பழைய நிலையே தொடரும். ஏப்ரல் 1 முதல் அமலுக்கு வரும் புதிய வருமான வரிச் சட்டத்தின் கீழ் வருமான வரி சார்ந்த தரவுகளை மறைத்தால் 100% அபராதம். தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, ஒடிசா உள்ளிட்ட மாநிலங்களில் அரிய வகை கனிம வளங்கள் எடுக்க புதிய திட்டம். சென்னை, மும்பை உள்ளிட்ட 7 நகரங்களை இணைக்க அதிவேக ரயில் பாதை. திருநெல்வேலி, பொதிகை மலை, அரக்கு பள்ளத்தாக்கு, இமாச்சல், உத்தரகாண்ட், ஜம்முவில் மலையேற்றத்தை ஊக்குவிக்க டிரெக்கிங் ட்ராக் திட்டம். ஆதிச்சநல்லூர்,தோளவீரா, ஹஸ்தினாபூர், உள்ளிட்ட 15 இடங்களில் கலாச்சார மையம் அமைக்கப்படும். பெண் கல்வியை ஊக்குவிக்க நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் பெண்கள் விடுதிகள் அமைக்கப்படும். எய்ம்ஸ் போன்று 3 புதிய அகில இந்திய ஆயுர்வேத கல்வி நிலையங்கள் உருவாக்கப்படும். 5 பல்கலைக்கழக நகரங்கள் உருவாக்கப்படும். சுற்றுலா துறையை மேம்படுத்த தேசிய கல்வி நிறுவனம் அமைக்கப்படும். அரிய வகை நோய்களுக்கான மருந்துகள், புற்றுநோய் சிகிச்சைக்கான 17 மருந்துகள் மீதான சுங்கவரி முழுமையாக நீக்கம். பழவேற்காடு ஏரியில் பறவைகளை காண்பதற்கான பிரத்யேக காட்சி மையம். வரி தொடர்பான சிறு குற்றங்களுக்கு குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படாது. வரி சார்ந்த பெரிய குற்றங்களுக்கு அதிகபட்ச தண்டனை 2 ஆண்டுகளாக குறைக்கபடும். வாகன விபத்து காப்பீடுகளுக்கு முழுமையாக வரி விலக்கு. கடல்சார் ஏற்றுமதி பொருட்களை உற்பத்தி செய்ய இறக்குமதி செய்யப்படும் மூலப் பொருட்களுக்கு வரிச் சலுகை உயர்த்தப்படும். இந்தியாவில் தென்னை, முந்திரி, கோகோ உற்பத்தியை ஊக்குவிக்க பிரத்தியேக திட்டம். பால் உற்பத்தி, கோழி, மீன் வளர்ப்பை அதிகரிக்க ஊக்குவிக்கப்படும். சந்தன மரச்சூழல் அமைப்பை மீட்டெடுக்கும் வகையில் சாகுபடி ஊக்குவிக்க மத்திய அரசு இணைந்து செயல்படும் 16-வது நிதிக்குழு பரிந்துரையின்படி மாநிலங்களுக்கு தலா ரூ.1.4 லட்சம் கோடி ஒதுக்கீடு. மேலும் ரூ.17.2 லட்சம் கோடி கடன் வாங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது போன்ற அறிவிப்புகளை அறிவித்து நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும் மக்களின் வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு இந்த பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.*

**ஆசிரியர்**

**இதழ் நிர்வாகத்தின் முக்கிய அறிவுறுத்தல்...**

'போலீஸ் பார்வை' மாத இதழில் இணைந்துள்ள நிருபர்கள், மற்ற பொறுப்பு வகிப்பவர்கள் என, எவரும் எந்த உள்நோக்கத்துடனும் சுய லாபத்திற்காக தவறாக செயல்பட நிர்வாகம் அனுமதிக்காது. மேலும், மீறி செயல்படுபவர்கள் பொறுப்பிலிருந்து நீக்கப்படுவார்கள்.



## தென்காசி மாவட்டத்தில்

# டெலிகிராம் மூலம் ஏமாற்றி பணம் பறித்த 6 பட்டதாரி இளைஞர்கள் கைது

தென்காசி மாவட்டத்தைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட நபர் ஆன்லைனில் போலியான டெலிகிராம் ஐடி மற்றும் போலியான வெப்சைட் ஆகியவற்றை உருவாக்கி காயின் பிட்டிங் டாஸ்க் (Old Coin Purchase Task) செய்தால் லாபம் கிடைக்கும் என்று கூறி முதலீடு செய்ய வைத்து போலியாக வாலட்டில் பணம் வரவு வைக்கப்பட்டதாக ரூ.5,83,007 பணத்தை வாங்கிக்கொண்டு ஏமாற்றியது தொடர்பாக, தென்காசி மாவட்ட சைபர் குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் அளித்த புகாரின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

விசாரணையில், குற்றவாளிகள் சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் இருப்பது தெரிய வந்தது.

அதனைத் தொடர்ந்து, தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.G.S.மாதவன் T.P.S. அவர்களின் அறிவுறுத்தலின்படி, கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.ஜீலியஸ் சீசர் அவர்களின் தலைமையில், காவல் ஆய்வாளர் திருமதி.வசந்தி மற்றும்  சைபர் குற்றப்பிரிவு காவலர்கள் சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு சென்று, மேற்படி குற்றங்களில் ஈடுபட்ட 6 குற்றவாளிகளை கைது செய்து அவர்களிடமிருந்து 10 மொபைல் போன்கள், 33 சிம் கார்டுகள், 44 வங்கி கணக்கு விவரங்கள், 68 ஏடிஎம் கார்டுகள், 13 செக் புத்தகங்கள், 2 லேப்டாப்கள் மற்றும் 1 மெமரி கார்டு ஆகியவை பறிமுதல் செய்தனர்.

மேற்படி குற்றவாளிகளிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், அவர்கள் அனைவரும் பொறியியல் பட்டதாரிகள் என்பதும், சிங்கப்பூரில் இதற்கு முன்பு பணியாற்றியிருப்பதாகவும், நாளிதழில் பணியாற்றி வருவதாகவும் குறைந்த காலத்தில் அதிக பணம் சம்பாதிக்கலாம் என்ற ஆசையில் தாங்கள் பெற்ற பொறியியல் அறிவை சைபர் குற்றச் செயல்களில் தவறாக பயன்படுத்தலாம் என எண்ணி இந்த குற்றங்களில் ஈடுபட்டது தெரியவந்துள்ளது.

குற்றவாளிகள் Donepay, Showpay, Hoyopay and Havipay போன்ற செயலிகளை பயன்படுத்தியும், குற்றவாளிகள் பணியாற்றி வந்த சிம் கார்டு விற்பனை பணியின் மூலம் பழக்கமான நபர்களிடம் வங்கி கணக்குகளை திறந்து தருமாறு கூறியும், சிவகங்கை, பரமக்குடி, காளையார்கோவில் சுற்று வட்டார பகுதிகளிலுள்ள பல்வேறு நபர்களை பணம் தருவதாக கூறி ஏமாற்றி வங்கி கணக்குகளை பெற்றுக் கொண்டும், அந்த வங்கி கணக்குகளை சைபர் மோசடி குற்றங்களில்

ஏமாற்றி பெறப்படும் பணத்தை பெற பயன்படுத்தி வந்துள்ளனர்.

மேலும் இவ்வாறு செயல்பட்டால் தாங்கள் சிக்கிக்கொள்ள மாட்டோம் என்ற தவறான எண்ணத்தில் அவர்கள் செயல்பட்டு வந்ததும் தெரிய வந்துள்ளது.

கைப்பற்றப்பட்ட வங்கி கணக்கு விவரங்களை ஆய்வு செய்ததில், குற்றவாளிகளுக்கு தமிழ்நாட்டின் பல்வேறு சைபர் குற்றப்பிரிவு காவல் நிலையங்களிலும், இந்தியா முழுவதிலுள்ள பல மாநில சைபர் குற்றப்பிரிவு காவல் நிலையங்களிலும் 100–க்கும் மேற்பட்ட வழக்குகள் இருப்பது தெரிய வந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து, எதிரிகள் மீது உரிய நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், அவர்களின் வங்கி கணக்கு விவரங்கள் தொடர்பாக புகார் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து மாநில சைபர் குற்றப்பிரிவு காவல் நிலையங்களுக்கும் தகவல் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கமிஷன் கிடைக்கும் என்ற ஆசையில் வங்கி கணக்கு விவரங்களை ஏஜென்ட்களிடம் வழங்கும் நபர்களும் குற்றவாளியாவார்கள்.

தங்களது வங்கி கணக்கு, ATM விவரங்கள் OTP, KYC போன்ற முக்கியமான விவரங் களை யாரிடமும் பகிர வேண்டாம் என்றும், ஆன்லைன் வேலை வாய்ப்புகள், இணையவழி பங்குச்சந்தை முதலீடுகள், இணையவழி கடன்கள், டிஜிட்டல் அரெஸ்ட் செய்துள்ளதாக ஏமாற்றும் நபர்கள், உதவித்தொகை பெற்றுத் தருவதாக ஏமாற்றும் நபர்கள் ஆன்லைனில் குறைந்த விலைக்கு பொருள்கள் தருவதாக தருவதாக ஏமாற்றும் நபர்கள், WhatsApp APK files (RTO Challan, SBI) தொடர்பாக மிகுந்த விழிப்புடன் இருக்குமாறு தென்காசி மாவட்ட காவல் துறை சார்பாக கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நிருபர்: P.அண்ணாமலை, தென்காசி.



***கோபத்தில் எது கிடைத்தாலும் தூக்கி எறிய எல்லோராலும் முடியும். ஆனால், அந்த கோபத்தையே தூக்கி எறிய ஒரு சிலரால்தான் முடியும். கோபத்தை தவிர்த்து மன மகிழ்வோடு வாழுங்கள்.***

**ஆசிரியர் Dr.N.பாலகிருஷ்ணன்**



## தென் மண்டல I.G. திரு.விஜயேந்திர பிதாரி IPS அவர்கள் தலைமையில்

# திருநெல்வேலி சரகத்தில் காவல் மாவட்டங்களின் ஆய்வுக் கூட்டம்

தென் மண்டல காவல்துறை தலைவர் திரு.விஜயேந்திர பிதாரி IPS அவர்கள் தலைமையில் திருநெல்வேலி காவல் மாவட்டங்களின் கலந்தாய்வுக் கூட்டம் 20.01.2026 அன்று நடைபெற்றது.

கலந்தாய்வு கூட்டத்தில் பங்கேற்க திருநெல்வேலிக்கு வருகை தந்த தென் மண்டல காவல்துறை தலைவர் திரு.விஜயேந்திர பிதாரி IPS அவர்களுக்கு அன்று காலை திருநெல்வேலி மாவட்ட ஆயுதப்படை கவாத்து மைதானத்தில் ஆயுதப்படை காவலர்களின் கவாத்து அணிவகுப்பு மரியாதை நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து, அங்கு பணியாற்றும் காவல் அலுவலர்கள் மற்றும் காவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கி, அவர்களிடமிருந்து குறை நிவாரண மனுக்களையும் பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து, திருநெல்வேலி மாவட்ட ஊர்க்காவல் படையைச் சேர்ந்த காவலர்களை முதல் முறையாக போக்குவரத்து ஒழுங்கு படுத்தும் காவல் பணிக்கு அனுப்பி வைக்கும் நிகழ்வைத் தொடங்கி வைத்து, அவர்களுக்கு தேவையான போக்குவரத்து ஒழுங்குபடுத்தும் உபகரணங்களையும் வழங்கினார்.

பின்னர், ஆயுதப்படை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள வழக்கு சான்று வைப்பகமான (Malkhana) புதிய கட்டிடத்தை திறந்து வைத்து, அப்பகுதியில் மரக்கன்று ஒன்றையும் நட்டு வைத்தார்.

தொடர்ந்து, திருநெல்வேலி மாவட்ட காவல் அலுவலகத்தில், திருநெல்வேலி சரகத்திற்கு உட்பட்ட காவல் மாவட்டங்களின் ஆய்வுக் கூட்டத்தை நடத்தினார்.

இந்தக் கூட்டத்தில், திருநெல்வேலி சரக காவல்துறை துணைத் தலைவர் DIG திரு.P.சரவணன் IPS அவர்கள், திருநெல்வேலி மாநகர காவல் ஆணையர் முனைவர்.N.மணிவண்ணன் IPS அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.V.பிரசன்ன குமார் IPS அவர்கள், கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப் பாளர் Dr.ஸ்டாலின் IPS அவர்கள் மற்றும் தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.N.சிலம்பரசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், சரகத்தில் உள்ள காவல் மாவட்டங்களில் சட்ட ஒழுங்கு பராமரிப்பு, குற்ற வழக்குகளில் புலன் விசாரணைகளை துரிதமாக முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்வது, நிலுவையில் உள்ள பிடிவாரண்டுகளின் மீது விரைந்து நடவடிக்கை எடுப்பது உள்ளிட்ட பல்வேறு









முக்கிய அம்சங்கள் குறித்து விவாதிக்கப்பட்டு, தேவையான அறிவுரைகள் வழங்கப்பட்டது.

மேலும், திருநெல்வேலி மாவட்டத்தில் குற்ற வழக்குகளில் புகார் அளித்த நபர்களின் புகாரின் பேரில் வழக்குகள் பதிவு செய்து, புலன் விசாரணை முடித்து இறுதி அறிக்கை தயாரித்தது தொடர்பான ஏற்பளிப்பு படிவங்களை, தென்மண்டல காவல்துறை தலைவர் அவர்கள் மனுதாரர்களுக்கு நேரடியாக மாவட்ட காவல் அலுவலகத்தில் வைத்து வழங்கினார்.

மேலும் குற்ற வழக்குகளில் புகார் அளித்தவர்கள், தாங்கள் அளித்த புகாரின் அடிப்படையில் காவல்துறையினர் புலன் விசாரணை முடித்து நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்த விவரங்களை அறிந்து கொள்ளும் உரிமை குறித்தும் அவர்களுக்கு தெளிவாக விளக்கினார்.

இதனைத் தொடர்ந்து, திருநெல்வேலி மாவட்டத்தில் பல்வேறு காவல் பணிகளில் சிறப்பாக பணியாற்றிய மூன்று காவல் ஆய்வாளர்கள் உள்ளிட்ட மொத்தம் 11 காவல் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி, பாராட்டு தெரிவித்தார்.

நிருபர்: R.ஜோதிபாசு, திருநெல்வேலி.



சென்னை, காமராசர் சாலையில் நடைபெற்ற குடியரசு நாள் விழாவில், வீரதீரச் செயலுக்கான அண்ணா பதக்கங்கள், காந்தியடிகள் காவலர் பதக்கங்கள், கோட்டை அமீர் மத நல்லிணக்கப் பதக்கம், டாக்டர் நாராயணசாமி நாயுடு வேளாண்மை விருது, சிறந்த காவல் நிலையத்திற்கான முதலமைச்சரின் கோப்பைகள் ஆகிய பதக்கங்களையும், கோப்பைகளையும் பெற்றவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

நிருபர்: E.பால்ராஜ், சென்னை.



குடியரசுதினவிழாவை முன்னிட்டு சிறந்த காவல் நிலையத்துக்கான முதலமைச்சர் கோப்பையை பெற்ற காவல் நிலையங்களில் 2–வது இடம் பெற்ற திருப்பூர் மாநகரகாவல் நிலையத்துக்கான கோப்பையை வேலம்பாளையம் காவல்நிலைய காவல் ஆய்வாளர் திருமதி.K.பிரேமா அவர்களுக்கு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வழங்கி பாராட்டினார்.

தலைமை நிருபர்: A.மாரிராஜா, திருப்பூர்.



குடியரசுதினவிழாவில் திருச்சி மாவட்ட காவல் துறை லால்குடி காவல் நிலைய காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் திருமதி.A.ஜெயலெட்சுமி சீரிய பணியினை பாராட்டி தமிழ்நாடு முதலமைச்சரின் காவல் பதக்கம் மாவட்ட ஆட்சியர்.திரு.சரவணன் IAS அவர்கள் வழங்கி பாராட்டினார்.

நிருபர்: R.தங்க பாண்டியன், லால்குடி.



திருச்சி மாவட்டம், துவரங்குறிச்சி காவல்நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட திருட்டு குற்ற வழக்கில் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு நீதிமன்றத்தில் தண்டனை பெற்றுத்தர உதவியாக இருந்த சிறப்பான பணியினை பாராட்டி துவரங்குறிச்சி காவல்நிலைய நீதிமன்ற பெண் தலைமை காவலர் (WHC 113) திருமதி.அந்தோணியம்மாள்–க்கு திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.S.செல்வநாகரத்தினம், IPS., அவர்கள் நற்பணிச் சான்றிதழ் வழங்கி பாராட்டினார்.

நிருபர்: S.ரவிச்சந்திரன், மணப்பாறை.



# 5 கிரகங்களின் பெயர்ச்சிகள்.!

## இந்த 3 ராசிகள் மிகவும் கவனமா இருக்கணும்.! கஷ்ட காலம் ஆரம்பம்.!

***கிரகங்களின் சஞ்சாரம் சில ராசிகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என ஜோதிடர்கள் கணித்துள்ளனர். சூரியன், சுக்கிரன், செவ்வாய், புதன் மாற்றங்களால் சில ராசிகளுக்கு பணக்கஷ்டம், மன அழுத்தம் ஏற்படலாம்.***

**மிதுனம்**

மிதுன ராசிக்கு பிப்ரவரி மாதம் சவாலானதாக இருக்கலாம். தேவையற்ற சர்ச்சைகளில் சிக்கிக் கொள்ள நேரிடலாம். குடும்ப உறவுகளில் சிக்கல் வரலாம். வாகனப் பழுது அல்லது ஆரோக்கியத்திற்காக அதிகம் செலவாகும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. குறிப்பாக பெற்றோருடன் சண்டை, சச்சரவுகள் ஏற்படலாம். எனவே பேச்சில் நிதானம் தேவை. உணர்ச்சிவசப்பட்டு அவசர முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

**சிம்மம்**

சிம்ம ராசிக்காரர்களுக்கு பிப்ரவரியில் கலவையான பலன்கள் கிடைக்கும். நீதிமன்ற வழக்குகளில் தீர்ப்புகள் சாதகமாக வராமல் போகலாம். பழைய சொத்துத் தகராறுகள் மீண்டும் வரலாம்.

ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிறு உடல் உபாதைகளை கூட புறக்கணிக்கக் கூடாது. அது பெரிய பின் விளைவுகளை ஏற்படுத்திவிடலாம். வாழ்க்கையில் எதிர்பாராத வண்ணம் சில எதிர்மறையான முடிவுகள் ஏற்படக்கூடும்.

குழந்தைகள் தொடர்பான விஷயங்களில் கவலைக்குரிய சூழ்நிலைகள் ஏற்படலாம். எனவே பிப்ரவரி மாதம் ஒவ்வொரு அடியையும் கவனத்துடன் எடுத்து வைக்க வேண்டியது அவசியம்.

**துலாம்**

துலாம் ராசியினர் இந்த மாதம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். கிரக மாற்றங்களால் கடைசி நேரத்தில் வேலைகள் நின்று போகலாம். வாகனம் ஓட்டும்போது எச்சரிக்கை தேவை. சொத்துத் தகராறுகள் வரலாம். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாது போன்ற சூழல் பல விஷயங்களில் ஏற்படக்கூடும். செலவுகள் அதிகரிக்கலாம். எவ்வளவு பணம் சம்பாதித்தாலும் அது தண்ணீர் போல செலவாகக்கூடும். வங்கி இருப்பு குறையலாம். சேமிப்பு கரையலாம். பணத்தை சேமிப்பது என்பது மிகவும் கடினமான காரியமாக மாறும். எனவே நிதி சார்ந்த விஷயங்களில் துலாம் ராசிக்காரர்கள் கவனத்துடன் இருக்கவும்.

**பரிகாரங்கள்**

அசுப கிரகங்களின் தாக்கத்தில் இருந்து விடுபட, ஜோதிடர்கள் சில பரிகாரங்களை பரிந்துரைத்துள்ளனர். தினமும் குல தெய்வத்தை வணங்க வேண்டும். ஏழைகளுக்கு உணவு, உடை தானம் செய்வது நல்லது. காலை வீட்டில் பூஜை செய்த பின்னர் வீட்டை விட்டு வெளியேறுவது நல்லது. பசுக்களுக்கு வெல்லம் கலந்த அரிசி அல்லது அகத்திக்கீரை கொடுப்பது கிரகங்களால் ஏற்படும் தோஷங்களை குறைக்கும். வாயில்லா ஜீவன்களுக்கு உணவளிப்பது சிறந்தது.




## மேஷ ராசி அன்பர்களே!

நீங்கள் எடுத்த வேலையை சரியான நேரத்தில் செய்து பெயர் வாங்குபவர்கள். இந்த மாதம் ராசிநாதன் செவ்வாய் தைரிய வீர்ய ஸ்தானத்தில் வக்ர நிலையில் இருந்தாலும் குரு சாரம் பெற்றிருப்பதால் எல்லா காரியங்களும் அனுகூலமாகும். முக்கிய நபர்களின் சந்திப்பும் அவர்களால் உதவியும் கிடைக்கும். உங்கள் வாக்கின் மூலம் அனைத்து காரியங்களையும் சாதித்துக் கொள்வீர்கள். உடல் ஆரோக்கியம் பெறும். மனதில் தைரியம் கூடும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு முக்கிய பொறுப்பு கிடைக்கலாம். செயல்திறன் அதிகரிக்கும். கணவன், மனைவிக்கிடையே இருந்த மனஸ்தாபங்கள் நீங்கும். பிள்ளைகள் கல்வி பற்றிய சிந்தனை அதிகரிக்கும். உறவினர் மத்தியில் மரியாதை கூடும். கடன் பிரச்சினை தீரும். செல்வநிலை உயரும். இறுக்கமான சூழ்நிலை மாறும். அரசியல்துறையினருக்கு மேலிடத்துடன் கருத்து வேற்றுமை உண்டாகலாம் கவனம் தேவை. எடுத்துக்கொண்ட காரியங்களில் நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

*வழிபடவேண்டிய தெய்வம்: சங்கர நாராயணர்*
*ஸ்லோகம்: கந்த சஷ்டி பாராயணம்*
*பரிகாரம்: துர்கைக்கு அர்ச்சனை செய்வது*
*சந்த்ராஷ்டமம்: தை 26-ம் தேதி 09/02/26 திங்கள் கிழமை அதிகாலை 3.00 மணி முதல் தை 29-ம் தேதி 12/02/26 வியாழக்கிழமை பகல் 2.42 மணி வரை*




## ரிஷப ராசி அன்பர்களே!

சொன்ன சொல்லை காப்பாற்ற பிரயத்தனம் எடுப்பீர்கள். இந்த மாதம் லாபஸ்தானத்தில் ராசிநாதன் சுக்கிரன் உச்சமாக இருக்க ராகு இணைந்திருக்க மிக நல்ல யோக காலகட்டத்தில் இருக்கிறீர்கள். நினைத்த காரியத்தை செய்து முடிக்கும் சூழ்நிலை உருவாகும். சுக்கிரன் சஞ்சாரத்தால் பணவசதி கூடும். தெய்வ சிந்தனை அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் சுபச் செலவு ஏற்படும். எதிர்பார்த்த லாபம் குறையலாம். புதிய ஆர்டர்களுக்காக கூடுதலாக அலைய வேண்டி இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும். மேலிடத்துடன் இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் அகலும். எதிர்பார்த்த பணி இடமாற்றம் கிடைக்கும். குடும்பாதிபதி புதன் தொழில் ஸ்தானத்தில் இருப்பதால் குடும்பத்தில் அடுத்தவர்களால் பிரச்சினைகள் தீரும். உங்களது கருத்துக்கு மாற்று கருத்து உண்டாகலாம். கணவன், மனைவிக்கிடையே மனம் விட்டு பேசுவது நன்மை தரும். பிள்ளைகளிடம் கவனமாக பேசுவது நல்லது. புதிய நபர்களின் அறிமுகம் அவர்களது நட்பும் நிதி நிலைமை சீர்படும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் காண்பதில் ஆர்வம் உண்டாகும். மனதில் உற்சாகம் ஏற்படும். எதிர்பார்த்த மேல்படிப்பு படிக்க வாய்ப்புகள் கிட்டும்.

*வழிபடவேண்டிய தெய்வம்: திருத்தணி முருகன்*
*ஸ்லோகம்: விஷ்ணுசகஸ்ரநாமம் பாராயணம்*
*பரிகாரம்: தட்சிணாமூர்த்திக்கு நெய்தீபம் ஏற்றுவது*
*சந்த்ராஷ்டமம்: தை 29-ம் தேதி 12/02/26 வியாழக்கிழமை பகல் 2.43 மணி முதல் மாசி 2-ம் தேதி 14/02/26 சனிக் கிழமை இரவு 1.30 மணி வரை*




## மிதுன ராசி அன்பர்களே!

நீங்கள் விடா முயற்சியுடைவர். இந்த மாதம் ராசிநாதன் புதன் பாக்கிய ஸ்தானத்திலிருக்கிறார். எதிலும் மிகவும் கவனமாக ஈடுபடுவது நல்லது. சுக்கிரன் சஞ்சாரம் பேச்சின் இனிமை சாதுர்யம் இவற்றால் எடுத்த காரியங்கள் சாதகமாக முடிய உதவும். சொத்து மனை வீடு சம்பந்தமான காரியங்களில் தாமதம் உண்டாகலாம். அடுத்தவர் பிரச்சினைகளில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது. பிள்ளைகளின் எதிர்காலம் பற்றி சிந்தனை அதிகரிக்கும். உறவினர்கள் வழியில் மனக்கசப்பு ஏற்படலாம். பெண்களுக்கு எந்த காரியத்திலும் ஈடுபடும் முன்பு திட்டமிட்டு செயல்படுவது நல்லது. பணவரத்து தாமதப்படும். கலைத்துறையினருக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைக்க பட்ட சிரமங்கள் குறையும். வேலை பளு குறையும். உழைப்பு வீணாகும். மனகவலை நீங்கி நிம்மதி உண்டாகும். பொருள் வரத்து அதிகரிக்கும். வாகனம், பூமி மூலம் லாபம் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் இருக்கும் மந்த நிலை மாற கூடுதல் கவனத்துடன் படிப்பது அவசியம். எந்த வேலையிலும் முழு கவனம் தேவை.

*வழிபடவேண்டிய தெய்வம்: மருதமலை முருகன்*
*ஸ்லோகம்: சிவ ஸ்துதிபாராயணம்*
*பரிகாரம்: ஆஞ்சநேயருக்கு வெற்றிலை மாலை*
*சந்த்ராஷ்டமம்: மாசி 2-ம் தேதி 14/02/26 சனிக்கிழமை இரவு 1.31 மணி முதல் மாசி 5-ம் தேதி 17/02/26 செவ்வாய்க்கிழமை காலை 10.04 மணி வரை.*




## கடக ராசி அன்பர்களே!

இந்த மாதம் நீண்ட நாட்களாக இருந்து வந்த தடைகள் நீங்கும். தனாதிபதி சூரியன் சஞ்சாரத்தால் எதிர்ப்புகள் விலகும். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். பணவரத்து எதிர்பார்த்தது போல் இருக்கும். புதிய நபர்களின் நட்பு கிடைக்கலாம். பாதியில் நின்ற காரியங்களை தொடர்ந்து செய்து முடிப்பீர்கள். வழக்குகளில் திடீர் குழப்பம் ஏற்படலாம். குடும்பாதிபதி சூரியன் அவரது ஸ்தானத்திற்கு சப்தம ஸ்தானத்திற்கு மாற போகிறார். குடும்பத்தில் சிறு சிறு சண்டைகள் உண்டாகலாம். பெரியோர்களிடம் ஆலோசனைகளைப் பெறுவது சிறந்தது. கலைத்துறையினருக்கு எதிர்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும். எல்லா காரியங்களும் நல்ல படியாக நடக்கும். ஆராய்ந்து செய்யும் காரியங்கள் சாதகமான பலன் தரும். வாகனங்களை ஓட்டும்போதும் எச்சரிக்கை அவசியம். வீண் செலவு ஏற்படும். தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் அதிகரிக்கும். ஆனால் பணவரத்து திருப்திகரமாக இருக்கும். மேலிடத்தின் கருத்துக்களுக்கு மதிப்பு கொடுப்பது நன்மை தரும். பெற்றோர், ஆசிரியர் ஆலோசனை கைகொடுக்கும்.

*வழிபடவேண்டிய தெய்வம்: விநாயகருக்கு அறுகம்புல்*
*ஸ்லோகம்: விநாயகர்அகவல் பாராயணம் செய்வது*
*பரிகாரம்: விநாயகருக்கு தும்பையால் அர்ச்சனை*
*சந்த்ராஷ்டமம்: மாசி 5-ம் தேதி 17/02/26 செவ்வாய் கிழமை காலை 10.05மணி முதல் மாசி 7-ம் தேதி 19/02/26 வியாழக்கிழமை மாலை 4.11 மணி வரை*

**சிம்ம ராசி அன்பர்களே!**




நீங்கள் உயர்மட்டத்தில் உள்ள மனிதர்களிடம் தொடர்பு வைத்திருப்பவர்கள். இந்த மாதம் ராசிநாதன் சூரியன் ரண ருண ரோக ஸ்தானத்தில் புதனுடன் இணைந்து சஞ்சரிக்கிறார். தனாதிபதி புதன் சப்தம ஸ்தானத்திற்கு மாற இருக்கிறார். சுபச்செலவுகள் அதிகரிக்கும். பயணங்கள் மூலம் வீண் அலைச்சலும், காரிய தாமதமும் உண்டாகும். புதிய நட்புகள் கிடைக்கும். எடுத்த காரியங்கள் கை கூடும். குடும்பத்தில் இருப்பவர்களின் இருந்து வந்த மனக்கிலேசங்கள் அகலும். கணவன், மற்றவர் களுக்காக பொறுப்புக்களை ஏற்பதை தவிர்ப்பது நல்லது. கலைத்துறையினருக்கு கூடுதல் பணிச்சுமையை ஏற்க வேண்டி இருக்கும். உங்களது கருத்துக்களை தெரிவிக்கும்போது கவனமாக பேசுவது நல்லது. மன துயரம் நீங்கும். சிற்றின்பச் செலவு அதிகரிக்கும். மனதில் ஏதாவது கலக்கம் ஏற்படும். காரணமே இல்லாமல் வீண் பழி சுமக்க நேரிடும். ஒதுங்கி சென்றாலும் வலிய வந்து சிலர் சண்டை போடலாம் கவனமாக இருப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் எதிர்பார்த்த முன்னேற்றம் காணப்படும்.

*வழிபடவேண்டிய தெய்வம்; ஸ்ரீகாளியம்மன்*
*ஸ்லோகம்: இராஜேஸ்வரி அஷ்டகம்*
*பரிகாரம்: அங்காள பரமேஸ்வரிக்கு நெய் தீபம்*
*சந்த்ராஷ்டமம்: மாசி 7–ம் தேதி 19/02/26 வியாழக் கிழமை மாலை 4.12 மணி மாசி 9–ம் தேதி 21/02/26 சனிக்கிழமை இரவு 8.17 மணி வரை*

**கன்னி ராசி அன்பர்களே!**




நீங்கள் ஆடம்பர வாழ்க்கையில் நாட்டமுடையவர். சிக்கனத்தை தாரக மந்திரமாகக் கொண்டு செயல்படுபவர்கள். இந்த மாதம் தனாதிபதி சுக்கிரன் சப்தம ஸ்தானத்தில் உச்சமாக சஞ்சரிப்பதால் பணவரத்து அதிகரிக்கும். மனக் குழப்பம் உண்டாகலாம். எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்து செய்வது நல்லது. திறமையான பணியாளர்கள் அமைவார்கள். உத்தி யோகத்தில் இருப்பவர்கள் திறமையாக செயல்பட்டு சாதகமான பலன் காண்பார்கள். சக பணியாளர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். திருமணம் சம்பந்தமான முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கலைத்துறையினருக்கு கண் நோய் ஏற்படலாம். வேளை தவறி உணவு உண்ணும்படி நேரலாம். தொழிலில் திடீர் போட்டி இருக்கும். வீண் வார்த்தைகளை பேசுவதை தவிர்ப்பது நல்லது. கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். அரசியல் துறையினருக்கு அதிகம் பணியாற்றுவதால் உடல் சோர்வடைய நேரலாம். மேலிடத்திடம் வீண் பேச்சுக்களை தவிர்ப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்வி தொடர்பான விஷயங்கள் சாதகமாக முடியும் திறமை வெளிப்படும்.

வழிபடவேண்டிய தெய்வம்;அர்த்தநாரீஸ்வரர்
ஸ்லோகம்: துர்க்கா அஷ்டகம்
பரிகாரம்: மகாலட்சுமிக்கு நெய் தீபம் ஏற்றுவது
சந்த்ராஷ்டமம்: மாசி 9–ம் தேதி 21/02/26 சனிக்கிழமை இரவு 8.18 மணி மாசி 11–ம் தேதி 23/02/26 திங்கள் கிழமை இரவு 11.03 மணி வரை

**துலா ராசி அன்பர்களே!**




நீங்கள் எங்கு சென்றாலும் உங்களுக்கு உதவ உள்ளங்கள் இருக்கும். இந்த மாதம் ராசிநாதன் சுக்கிரன் மறைந்திருந்தாலும் உச்சமாக இருப்பதன் மூலம் மனம் மகிழும் சம்பவங்கள் உண்டாகும். செவ்வாய் சஞ்சாரத்தால் மன நிம்மதியும், மனோதிடமும் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் தெளிவாக சிந்தித்து எதனையும் வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். சூரியன் சஞ்சாரத்தால் புதிய பதவிகள் கிடைக்கும். குடும்ப ஸ்தானத்தை குருவும் சனியும் பார்க்கிறார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியும், உற்சாகமும் காணப்படும். காரியங்களை செய்து முடிப்பதில் திறமை வெளிப்படும் பணவரத்து கூடும். கலைத் துறையினருக்கு அனுசரித்து செல்வது நல்லது. மனக்கவலை உண்டாகும். வீண் அலைச்சலும் அதனால் சரியான நேரத்திற்கு உணவு உண்ண முடியாமலும் போகலாம். எதிலும் கவனமாக செயல்படுவது நல்லது. உடல் சோர்வு உண்டாகலாம். வீண் அலைச்சலை தவிர்த்து வேலையில் கவனம் செலுத்துவது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் நினைத்ததை விட கூடுதல் பாடங்களை படிக்க வேண்டி இருக்கும்.

*வழிபடவேண்டிய தெய்வம்: தட்சிணாமூர்த்தி*
*ஸ்லோகம்: தஷ்க்ஷிணா மூர்த்தி அஷ்டகம்*
*பரிகாரம்: துர்க்கைக்கு நெய் தீபம்*
*சந்த்ராஷ்டமம்: மாசி 11–ம் தேதி 23/02/26 திங்கள் கிழமை இரவு 11.04 மணி முதல் மாசி 13–ம் தேதி 25/02/26 புதன்கிழமை இரவு 1.22 மணி வரை.*

**விருச்சிக ராசி அன்பர்களே!**




நீங்கள் கொடுத்த வேலைகளை கனகச்சிதமாக முடிப்பதில் சிறந்தவர். இந்த மாதம் எதிர்பார்த்த பணவரத்து வந்து சேரும். ராசியில் இருக்கும் வக்ரசனியால் மன நிம்மதி குறையலாம். வீண் பிரச்சினைகளை சந்திக்க வேண்டி இருக்கும். எனவே கவனமாக எதிலும் ஈடுபடுவது நல்லது. அதே வேளையில் ராசிநாதனின் சஞ்சாரத்தால் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த உதவிகளும் கிடைக்கும். கணவன், மனைவிக்கிடையே வீண் வாக்குவாதங்கள் ஏற்படலாம். பிள்ளைகள் நலனில் அக்கறை காண்பீர்கள். உடல் களைப்பும், சோர்வும் உண்டாகலாம். கவனமாக இருப்பது நல்லது. பெண்களுக்கு எந்த காரியத்தில் ஈடுபடும் போதும் யோசித்து செயல்படுவது நல்லது. வீண் அலைச்சல் ஏற்படலாம். செலவு கூடும். அரசியல் துறையினருக்கு வீண் அலைச்சல், காரிய தாமதம் போன்றவை ஏற்படலாம். புதிய முயற்சிகளை தள்ளி போடுவதும் நல்லது. காரிய அனுகூலம் ஏற்படும். உணர்ச்சிகரமாக பேசி மற்றவர்களை கவருவீர்கள். பணம் வரத்து கூடும். மாணவர்களுக்கு விளையாட்டில் ஆர்வம் உண்டாகும். பாடங்களை கவனமாக படிப்பது முன்னேற்றத்துக்கு உதவும்.

*வழிபடவேண்டிய தெய்வம்: பைரவர்*
*ஸ்லோகம்: பைரவர் அஷ்டகம்*
*பரிகாரம்: சிவபெருமானுக்கு நெய் தீபம்*
*சந்த்ராஷ்டமம்: மாசி 13–ம் தேதி 25/02/26 புதன்கிழமை இரவு 1.23 மணி முதல் மாசி 16 28/02/26 சனிக்கிழமை காலை 4.09 மணி வரை.*

**தனுசு ராசி அன்பர்களே!**

நீங்கள் தெய்வம் சம்பந்தமட்ட காரியங்களில் ஈடுபாடு கொண்டவர்கள். இந்த மாதம் எதிர்பார்த்த பணவரத்து தாமதமாக கிடைக்கலாம். வாக்கு வன்மை ஏற்படும். விருந்து கேளிக்கை நிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள். சக ஊழியர்கள் ஆதரவாக இருப்பார்கள். குடும்பத்தில் இதமான சூழ்நிலை காணப்படும். புதிய வீடு கட்டுவது, பழைய வீட்டை புதுப்பிப்பது போன்ற பணிகளை தொடங்க முற்படுவீர்கள். கணவன் மனைவிக்கிடையே மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகளால் பெருமை சேரும். அவர்களுக்கு தேவையானவற்றை வாங்கி கொடுத்து மகிழ்ச்சியில் ஆழ்த்துவீர்கள். உறவினர்களுடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். பெண்களுக்கு விருந்து கேளிக்கை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். கலைத்துறையினருக்கு கொடுக்கல் வாங்கலில் இருந்த பிரச்சினை தீரும். நீண்ட நாளாக இருந்த கஷ்டம் நீங்கும். எதையும் செய்து முடிக்கும் சாமர்த்தியம் உண்டாகும். அரசாங்கம் மூலம் லாபம் ஏற்படும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் சாதகமாக இருக்கும். மாணவர்கள் மற்றவர்களின் பாராட்டை பெறுவீர்கள்.

*வழிபடவேண்டிய தெய்வம்: ஏகாம்பரேஸ்வரர்*
*ஸ்லோகம்: சனிஸ்வர ஸ்லோகம் பாராயணம்*
*பரிகாரம்: சனிஷ்வரருக்கு நல்லெண்ணெய் தீபம்*
*சந்த்ராஷ்டமம்: மாசி 16-ம் தேதி 28/02/26 அதிகாலை 4.10 மணி முதல் மாசி 18-ம் தேதி 02/03/26 திங்கள்கிழமை காலை 8.18 மணி வரை*

**மகர ராசி அன்பர்களே!**

நீங்கள் அதிர்ஷ்டத்தை நம்பாமல் உழைப்பினை நம்புபவர்கள். இந்த மாதம் பணதேவை அதிகரிக்கும். ராசிநாதன் சனி சஞ்சாரத்தால் இடமாற்றம் ஏற்படலாம். ஆடை அணிகலன் வாங்குவதன் மூலம் செலவு உண்டாகும். எதிர்பார்த்த பணவரவு இருக்கும். வாகன யோகம் கிடைக்கும். எதில் கையெழுத்து போடுவதாயிருந்தாலும் குடும்பத்தில் இருப்பவர்களுடன் கவனமாக பேசுவது நல்லது. கணவன், மனைவிக்கிடையே திடீர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. உறவினர்கள் நண்பர்களுக்கு உதவி செய்வதற்கு முன் ஆலோசனை செய்து கொள்வது நல்லது. பெண்களுக்கு பணவரத்து திருப்தி தரும். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. பணவரத்து திருப்திகரமாக இருக்கும். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். அவர்கள் மூலம் முன்னேற்றம் காண உதவி கிடைக்கும். தடைபட்டு வந்த காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் வேகம் காணப்படும். சக மாணவர்களிடம் சுமுகமாக அனுசரித்துபோவது நல்லது.

*வழிபடவேண்டிய தெய்வம்: சூரியன்*
*ஸ்லோகம்: சூரியன் அஷ்டகம்*
*பரிகாரம்: கூடலழகருக்கு துளசி மாலை*
*சந்த்ராஷ்டமம்: தை 19-ம் தேதி 02/02/26 திங்கள் கிழமை இரவு 12.33 மணி முதல் தை 22-ம் தேதி 05/02/26 வியாழக்கிழமை காலை 7.01 மணி வரை*

**கும்ப ராசி அன்பர்களே!**

நீங்கள் இளகிய மனம் படைத்தவர்கள். பொறுமையும் நிதானமும் உடையவர்கள். இந்த மாதம் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நடக்கலாம். உடல் ஆரோக்கியம் ஏற்படும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்தவை நல்லபடியாக முடியும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சில விஷயங்களை தவறாக புரிந்து கொண்டு சங்கடப்பட வேண்டி இருக்கும். வாக்குவன்மையால் நன்மை ஏற்படும். குடும்பாதிபதி குரு சஞ்சாரத்தால் குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் தீரும். கணவன், மனைவிக்கிடையில் இருந்த இடைவெளி குறையும். மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். பிள்ளைகளிடம் அன்பு அதிகரிக்கும். கலைத்துறையினருக்கு இருந்த போட்டிகள் குறையும். பழைய பாக்கிகள் வசூலாகும். சக கலைஞர்கள் மூலம் நன்மை ஏற்படும். சாமர்த்தியமான பேச்சின் மூலம் நன் மதிப்பை பெறுவீர்கள். நேர்மையாக சிறப்பாக பணிகளை செய்து பாராட்டுக்கள் கிடைக்க பெறுவீர்கள். தடைபட்ட காரியங்கள் சாதகமாக முடியும். பணவரத்து அதிகரிக்கும். மாணவர்கள் செயல்களால் மற்றவர் மனதில் இடம் பிடிப்பீர்கள்.

*வழிபடவேண்டிய தெய்வம்: மகாலட்சுமி*
*ஸ்லோகம்: மகாலெஷ்மி அஷ்டோத்திரம்*
*பரிகாரம்: வரதராஜப்பெருமாளுக்கு நீராஞ்சனம்*
*சந்த்ராஷ்டமம்: தை 22-ம் தேதி 05/02/26 வியாழக்கிழமை காலை 7.02மணி முதல் தை 24ம் தேதி 07/02/26 சனிக்கிழமை மாலை 4.00 மணி வரை*

**மீன ராசி அன்பர்களே !**

நீங்கள் கற்பனை வளமும் கலையார்வமும் மிக்கவர்கள். நட்பிற்கு முக்கியத்துவம் அளிப்பவர்கள். இந்த மாதம் விருப்பங்கள் கைகூடும். ராசிநாதன் சஞ்சாரத்தால் பயன் தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எந்த வேலையை செய்யும் முன்பும் அதுபற்றி அதிகம் யோசிப்பார்கள். சிலருக்கு புதிய வேலையும் கிடைக்கலாம். குடும்பத்தில் சகஜநிலை காணப்படும். கணவன் மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். பிள்ளைகள் உங்கள் சொல்படி நடப்பது மனதுக்கு மகிழ்ச்சியை தரும். உறவினர்கள் வகையில் செலவுகள் ஏற்படலாம். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். திடீர் பணதேவை உண்டாகலாம். வீண் முயற்சிகளை தவிர்ப்பது நல்லது. எதையும் ஆராய்ந்து முடிவுகளை எடுப்பது நல்லது. பழைய பாக்கிகள் வசூலாவதில் மெத்தனம் காணப்படும். எந்த ஒரு வேலையையும் அலைந்து செய்து முடிக்க வேண்டி இருக்கும். எந்த ஒரு முடிவையும் எடுக்கும்போது ஒருமுறைக்கு பலமுறை யோசிப்பது நல்லது. மாணவர்களுக்கு தொழிற்கல்வி கற்பதில் ஆர்வம் உண்டாகும். திறமையுடன் செயலாற்றுவீர்கள்.

*வழிபடவேண்டிய தெய்வம்: சனீஸ்வரர்*
*ஸ்லோகம்: சிவபுராணம்*
*பரிகாரம்: சனீஸ்வரருக்கு நல்லெண்ணெய் தீபம்*
*சந்த்ராஷ்டமம்: தை 24-ம் தேதி 07/02/26 மாலை 4.01 மணி முதல் தை 26-ம் தேதி 09/02/26 திங்கள்கிழமை இரவு 2.52 மணி வரை.*



# இது மருந்தல்ல.., உணவு

நீண்டநாள் நல் ஆயுளோடு வாழ ரகசிய உணவு (மருந்து). மனிதனின் பானை வயிற்றை சீராக்கவும் சிறந்த உணவு.

இதய பிரச்சினைகளுக்கு, ரத்தக்குழாய் அடைப்பு, ஹார்ட் ஹட்டாக், பை பாஸ் சர்ஜரி, ஓப்பன் ஹார்ட் சர்ஜரி, இது சார்ந்த, ட்ரெட் மில், ஆன்ஜியோ கொடுமைகளில் இருந்து தப்பிக்க..

உடல் உறிஞ்ச தகுதியில்லாத கழிவாக தேங்கியுள்ள கெட்ட கொழுப்பை கரைத்து வெளியேற்றவும், நிறை மாத கர்பிணி போன்ற தோற்றத்தை தரும் பலரின் பானை வயிற்றை தட்டையாக்கவும் பச்சைபூண்டு மிக மிக சிறந்தது.

சிலர் இதை அப்படியே சாப்பிட முயற்சித்து, அதில் உள்ள அமிலத்தன்மையின் வீரியம் தாங்கமுடியாமல் சமைத்து சாப்பிடுதல் என்ற வசதியான குறிப்பை சாதகமாக்கி கொண்டு, முயற்சித்து, பயன் இல்லாமல் பாதியிலேயே விட்டு விடுவார்கள்.

பூண்டில் இருக்கும் ஒரு இயற்கை அமிலம் ஒப்பற்ற மருத்துவ குணம் உடையது. சமைத்தால், அதன் இயல்பு தன்மை வெகுவாக பாதிக்கப்படும். இயற்கையாகவே, சமைக்காத பூண்டு துண்டுகளை நன்கு கடித்து உமிழ் நீரில் செரிமானம் செய்தலே பூண்டை உணவாகவும், மருந்தாகவும் பயன்படுத்தும் சரியான முறையாகும்.

**செய்முறை**

பத்து முழு பூண்டை உரித்து, தோல் நீக்கி, சிறு சிறு துண்டுகளாக்கி, சுத்தமான பருத்தி துணியில் 8–லிருந்து 12–மணி நேரம் நிழலில் காய வைத்த பின், அதனுடன் 5 முழு எலுமிச்சை பழங்களின் சாற்றோடு மூழ்கும் வரை தேன் ஊற்றி, குறைந்தது 50 நாட்கள் ஊரவைத்த பின், காலை மாலை 1/2 ஸ்பூன் பூண்டு துண்டங்களை ருசித்து ரசித்து சாப்பிட ஆரோக்யத்தை அருகிலேயே வைத்துக்கொள்ளலாம்.

சாப்பிட அவ்வளவு ருசியாகவும், அடுத்த நாள் தானாக உடலும் மனமும் நாடும் ஒரு பதார்த்தமாக விளங்கும்.

6 மாதத்திற்கு ஒரு முறையாவது 48 நாட்களுக்கு தொடர்ந்து சாப்பிட்டு வர, எமதர்மன் நமது பெயரை உடனடி காத்திருப்போர் பட்டியலில் இருந்து நீக்கிவிட்டு, 100–வது வயதுக்கு பின்வரும் மூப்போய்வு (super annuation retirement) பட்டியலில் சேர்த்து விடுவார்.

மிக முக்கிய குறிப்பு, இது மருந்தல்ல, உணவு.



# பாஜவின் தேசிய தலைவராக பொறுப்பேற்றுள்ள நிதின் நபின் அவர்களுக்கு அண்ணாமலை வாழ்த்து

பாஜக தேசியத் தலைவராகப் பொறுப்பேற்றுள்ள நிதின் நபின் அவர்களுக்கு மனமார்ந்த வாழ்த்துகள்!

உலகின் மிகப்பெரிய அரசியல் கட்சியான பாரதிய ஜனதா கட்சியின் புதிய தேசியத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு. நிதின் நபின் அவர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு சாதாரண அடிமட்டத் தொண்டராகத் (கார்யகர்த்தா) தனது பயணத்தைத் தொடங்கி, இந்த வரலாற்றுச் சிறப்புமிக்கப் பொறுப்பை அவர் எட்டியிருப்பது, நமது கட்சியின் உண்மையான உணர்வைப் பிரதிபலிக்கிறது.

கடின உழைப்பு, தளராத உறுதி மற்றும் அமைப்பின் மீதான அர்ப்பணிப்பு ஆகியவை பாரதிய ஜனதா கட்சியில் எப்போதும் அங்கீகரிக்கப்பட்டு வெகுமதி அளிக்கப்படும் என்பதற்கு இதுவே சான்று.

நமது கட்சியின் மகத்தான வரலாற்றில், மிக இளைய வயதில் தேசியத் தலைவரானவர் என்ற பெருமையை அவர் பெறுகிறார். தகுதியின் அடிப்படையில் மட்டுமே முன்னேற்றம் என்பதை இது நிரூபிப்பதோடு, அடிமட்டத்திலிருந்து வரும் திறமைகளை உண்மையாக வளர்க்கும் ஒரே கட்சி பாஜகதான் என்பதையும் உலகுக்கு பறைசாற்றுகிறது.

இளைஞர் அணிப் பிரச்சாரங்கள் முதல் முக்கியமான பொறுப்புகள் வரை திரு.நிதின் நபின் அவர்களின் வளர்ச்சி, நமது இயக்கத்தை வரையறுக்கும் சித்தாந்த ஈடுபாட்டையும் களப்பணியையும் பிரதிபலிக்கிறது. தலைவர்கள் அமைப்புக்கும் மக்களுக்கும் செய்யும் சேவையின் மூலமே உருவாக்கப்படுகிறார்கள் என்பதை பாஜக எப்போதும் நம்புகிறது.

இவரது தேர்வு இந்தக் கொள்கையை மீண்டும் உறுதிப்படுத்துவதோடு, நாடு முழுவதும் உள்ள கோடிக்கணக்கான தொண்டர்களுக்கு ஒரு வலிமையான செய்தியை வழங்குகிறது.

பாரதப் பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்களின் தொடர்ச்சியான வழிகாட்டுதலின்படி, நிதின் நபின் அவர்களின் திறமையான தலைமையின் கீழும், நமது கட்சித் தொண்டர்கள் புத்துயிர் பெற்று, கட்சியின் வளர்ச்சிக்காகவும், நமது பாரத தேசத்தின் முன்னேற்றத்திற்காகவும் பெருமிதத்துடன் உழைக்கத் தயாராக உள்ளனர் என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம்.

முன்னாள் தேசியத் தலைவரும், மத்திய சுகாதாரத் துறை அமைச்சருமான ஜே.பி.நட்டா அவர்களின் அளப்பரிய பங்களிப்பையும், சிறந்த உழைப்பையும் நாங்கள் இந்த நேரத்தில் நன்றியுடன் நினைவு கூர்கிறோம்.

கட்சியின் இக்கட்டான காலக்கட்டங்களில் முன்னின்று வழிநடத்திய அவரது தலைமை, நமது அமைப்புக் கட்டமைப்பை வலுப்படுத்தியதோடு, தேச முன்னேற்றத்திற்கான நமது அர்ப்பணிப்பை உறுதி செய்தது. இந்த பெரும் பொறுப்பை ஏற்கும் நிதின் நபின் அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிருபர்: G.பாபு, சென்னை.

கொலை முயற்சி வழக்குகளில் சம்பந்தப்பட்டு

# பொது ஒழுங்கு பராமரிப்பிற்கு குந்தகம் விளைவித்தவர் குண்டர் தடுப்பு சட்டத்தில் கைது



முனைவர் N.மணிவண்ணன் IPS

திருநெல்வேலி மாநகர பகுதியில் கொலை முயற்சி வழக்குகளில் சம்பந்தப்பட்டு பொது ஒழுங்கு பராமரிப்பிற்கு குந்தகம் விளைவிக்கும் செயல்களில் ஈடுபட்டு வந்த திருநெல்வேலி டவுண் புட்டாரத்தி அம்மன் கோவில் தெருவை சேர்ந்த மகேந்திரன் மகன் பாஞ்சாலராஜன்(33) என்பவர் திருநெல்வேலி மாநகர காவல் துணை ஆணையர் Dr.S.மதன் IPS (மேற்கு), காவல் உதவி ஆணையர், திரு.சரவணன் (சந்திப்பு சரகம்), காவல் ஆய்வாளர் திரு.பாலமுருகன் (சந்திப்பு சட்டம் ஒழுங்கு) ஆகியோரின் பரிந்துரையின் பேரில் திருநெல்வேலி மாநகர காவல் ஆணையர் முனைவர்.N.மணிவண்ணன் IPS அவர்களின் ஆணைப்படி குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் பாளையங்கோட்டை மத்திய சிறையில் தடுப்புக் காவலில் அடைக்கப்பட்டார்.

நிருபர்: R.ஜோதிபாசு, திருநெல்வேலி.

# கொலை குற்றவாளிக்கு ஆயுள் சிறை தண்டனை மற்றும் ரூ.5,500/- அபராதம்

## புலன் விசாரணை அதிகாரி உட்பட காவலர்களுக்கு கோவை மாவட்ட SP Dr.K.கார்த்திகேயன் IPS அவர்கள் பாராட்டு


கோவை மாவட்டம் மதுக்கரை காவல் நிலைய பகுதியில் கடந்த 2020–ம் ஆண்டு சக்திவேல் என்பவரை கொலை செய்த குற்றத்திற்காக செல்வராஜ் மகன் சுரேஷ் (44) என்பவர் மீது மதுக்கரை காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டு, இவ்வழக்கின் விசாரணை கோவை ஐந்தாவது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

இவ்வழக்கின் விசாரணை (29.01.2026) முடிவு பெற்று குற்றவாளி சுரேஷ்(44) என்பவருக்கு ஆயுள் சிறை தண்டனை மற்றும் ரூ.5,500/– அபராதம் விதித்து நீதிபதி தீர்ப்பு வழங்கினார். இவ்வழக்கினை சிறந்த முறையில் புலன் விசாரணை மேற்கொண்ட புலன் விசாரணை அதிகாரி மற்றும் சாட்சிகளை நீதிமன்றத்தில் சிறந்த முறையில் ஆஜர்படுத்திய நீதிமன்ற சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. ஆனந்த் குமார் ஆகியோரை கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.K.கார்த்திகேயன் IPS அவர்கள் பாராட்டினார்.



சுரேஷ் (44)

நிருபர்: P.நட்ராஜ், கோவை.



# வீர வாஞ்சிநாதன்

இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றில் பல்வேறு வழிகளில் போராடிய வீரர்களில், ஆயுதம் ஏந்தி ஆங்கிலேய அடக்குமுறைக்கு எதிராக நின்றவர்களில் வீர வாஞ்சிநாதன் மிக முக்கியமானவர். அவர் செய்த தியாகம் தமிழ்நாட்டின் புரட்சிப் போராட்டத்திற்கு ஒரு புதிய திசையை வழங்கியது.

19–ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலும் 20–ம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இந்தியா முழுவதும் ஆங்கிலேயரின் ஆட்சி கடுமையாக இருந்தது. குறிப்பாக திருநெல்வேலி மாவட்டத்தில், ஆங்கிலேய அரசின் பிரதிநிதியாக இருந்த ஆஷ் துரை (Robert William d'Escourt Ashe) இந்திய மக்களுக்கு எதிராக கடுமையான அடக்குமுறைகளை மேற்கொண்டார்.

விவசாயிகள், தொழிலாளர்கள் மீது அதிக வரி விதிப்பதும், தேசிய உணர்வுள்ள தலைவர்களை ஒடுக்குவதும் அவரது ஆட்சியின் தனிச்சிறப்பாக இருந்தது. வ.உ.சிதம்பரனார், சுப்பிரமணிய சிவா போன்ற தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர்.

வீர வாஞ்சிநாதன் 1886–ம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்தில் பிறந்தார். ஆங்கிலேய அரசின் கீழ் துணை தாசில்தாராகப் பணியாற்றினாலும், அவரது உள்ளம் தேசப்பற்றால் நிறைந்திருந்தது.

பாரதியார் மற்றும் வ.உ.சிதம்பரனாரின் எழுத்துகளும் செயல்பாடுகளும் அவரை ஆழமாக பாதித்தன. ஆஷ் துரையின் கொடுங்கோன்மை நாளுக்கு நாள் அதிகரிக்க, அதை எதிர்த்து ஒரு தீர்க்கமான முடிவை வாஞ்சிநாதன் எடுத்தார்.

1911–ம் ஆண்டு ஜூன் 17–ம் தேதி, மணியாச்சி ரயில் நிலையத்தில் நிகழ்ந்த சம்பவம் இந்திய வரலாற்றில் ஒரு முக்கியமான திருப்புமுனையாக அமைந்தது.

ரயிலில் பயணம் செய்துகொண்டிருந்த ஆஷ் துரையை, வீர வாஞ்சிநாதன் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றார். அதன் பின்னர், தானே துப்பாக்கியால் உயிர் துறந்து, தேசத்திற்காகத் தன் வாழ்க்கையை அர்ப்பணித்தார்.

அவர் எழுதிய கடிதத்தில், இந்தச் செயல் தனிப்பட்ட பகை காரணமாக அல்ல, நாட்டின் விடுதலைக்காக எடுத்த தீர்மானம் என்று விளக்கியிருந்தார். வீர வாஞ்சிநாதனின் தியாகம் தமிழ்நாட்டில் புரட்சிகர உணர்வை தூண்டியது.

இளைஞர்களிடையே தேசப்பற்று வலுப்பெற்று, சுதந்திரப் போராட்டம் புதிய வேகத்தை பெற்றது. அவரது நினைவாக மணியாச்சி ஊர் வாஞ்சிநாதன் பட்டி என மறுபெயரிடப்பட்டது. இன்று அவர் தமிழ்நாட்டின் முக்கிய சுதந்திரத் தியாகிகளில் ஒருவராக கொண்டாடப்படுகிறார்.

முடிவாக, வீர வாஞ்சிநாதன் ஒரு தனிநபராக இருந்தாலும், அவரது தியாகம் ஒரு தேசத்தின் சுதந்திர கனவுக்காக அர்ப்பணிக்கப்பட்டது. அவரது வாழ்க்கையும் மரணமும் இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் என்றும் பொன்னெழுத்துக்களால் எழுதப்பட்டு நிற்கும்.

ஓம் காளி ஓம் நமசிவாய



கருடசித்தர் Dr.பாலகிருஷ்ண சுவாமி
எரசை, தேனி மாவட்டம்.

# சோழியம்மன் ரகசியங்கள்

நம்முடைய அகண்ட பாரத ஒரு தெய்வீக தேசமாகும். நம் தேசத்தில் உள்ள ரிஷிகளும், யோகிகளும், முனிவர்களும், சித்தர்களும், ஆழ்வார்களும், நாயன் மார்களும், தங்கள் தவ சக்தியாலும், தங்கள் பக்தியாலும் தெய்வங்களை நேரடியாகக் கண்டு ஆசிர்வாதம் வாங்கி பேரானந்தத்தை அனுபவித்தவர்கள்.

சிறுதெய்வ வழிபாட்டையும், பெரும் தெய்வ வழி பாட்டையும் அவர்கள் செய்து மக்களுக்கும் எப்படி வழிப டுவது என்பதைக் கற்றுக் கொடுத்தார்கள். மக்களுடைய குடும்ப பிரச்சனைகள் தீரவும், மனக் கவலை நீங்கவும், எதிர்காலத்தை முன் கூட்டியே அறிந்து கொள்ளவும், சிறு தெய்வ வழிபாட்டை தன் சீடர்களுக்கும், மக்களுக்கும் கற்றுக் கொடுத்தார்கள். அந்த வழியில் சிறு தெய்வ வழிபாட்டில் பிரசன்னம் பார்ப்பதற்கும், முக்காலத்தையும் அறிவிக்கும் மச்சக்குறி தெய்வமாக விளங்கும் சோழி யம்மனின் தெய்வீக ரகசியங்களைப் பற்றிப் பார்ப்போம்.

### சோழியம்மன் வரலாறு (காசி சோழியம்மன்)

சோழியம்மனுக்கு காசியில் சோழியம்மன் கோவில் உள்ளது. தமிழ்நாட்டில் திருப்பூர் மாவட்டத்திலும் நல்லூர் சோழியம்மன் கோவில் உள்ளது. ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு வரலாறு சொல்லப்படுகின்றது. காசியில் சிவனால் சாபம் பெற்று பின்பு சிவனால் சாப விமோசனம் அடைந்து சோழியம்மனாக மக்களுக்கு அருள் பாலிக்கின்றார்.

காசியில் முழுமையாக சோழியம்மன்



இருந்து அருள் பாலிக்கின்றார். காசியில் புனித யாத்திரை சென்ற புண்ணியம் சோழியம்மனை தரிசனம் செய்தாலே காசிப் புண்ணியம் முழுமையாகும் என்ற ஐதீகம் உள்ளது. சோழியம்மனஒத் தரிசிக்காமல் காசிப் பலன் கிடைக்காது. சோழியம்மனுக்கு சோழிமுத்தே பூஜைக்கு பயன்படுகிறது. பிரசாதமாக சோழிமுத்து பக்தர்களுக்கு அளிக்கப் படுகின்றது.

### சோழியம்மனோடு சேர்ந்த தெய்வங்கள்

ஜக்கம்மா, ஜாலக்கான், பட்டாளம்மன், தொட்டிச்சி, 21 சீலைக்காரி, வீருசின்னு அக்னியில் மாண்டவள், பழையனூர் நீலி, சோழியம்மன், முத்தம்மா, மோகினி தெய்வங்கள், எல்லம்மாள், அருந்ததியம்மாள், பேச்சியம் மன், நாகம்மாள், இன்னும் நூற்றுக்கணக்கான சிறு தெய்வங்கள் இருக்கின்றது. இவைகள் எல்லாம் மக்க ளுக்கு குல தெய்வமாக இன்றும் விளங்குகின்றது.

மனிதர்களை ஆபத்தில் இருந்தும், பிரச்சனைகளில் இருந்தும் காத்து நல்வழி காட்டுகின்றது.இவைகள் துடியான தெய்வங்களாக இருக்கின்றது. வாக்கு தவறாத வலிமைமிக்க தெய்வங்களாக விளங்குகின்றது.

## வழிபடுவதால் வரும் பலன்கள்

இந்த சோழியம்மன் குறிசொல்வதற்கு முழு சக்தியை கொடுக்கின்றது. மாந்தீரீகம் செய்பவர்கள் சோழியம்மனை முழுமையாக வழிபடுவார்கள், வாக்கு சித்தி தெய்வமாக விளங்குகின்றது.

சோழிப்பிரசன்னம், ஆருடம், நிமித்தம், சாதகம், அருள் இறங்கி குறி சொல்லுதல், வாக்கு சித்தியாதல், போன்ற தெய்வீக காரியங்கள் செய்யும்போது சோழியம் மனை முழுமையாக வழிபட்டு செய்தாலே மேலே சொன்ன எல்லா விசயங்களும் நமக்கு முழு சித்தியைத் தரும். இது நீர் சார்ந்த தெய்வமாக விளங்குகின்றது.

சோழியம்மனை முழுமையாக வழிபடுவதால் முழு தெய்வீக சக்தி நமக்கு கிடைக்கும். இது சோழி மாதா என்றும் கடல் மாதா என்றும் அழைக்கப்படுகின்றது. காசிக்கு சென்று சோழியம்மனை வழிபடுபவர்கள் காசிப் பலன் எனக்கு சோழிப்பலன் உனக்கு என்று சொல்லி சோழியை வைத்துப் பூசை செய்வார்கள். சோழியம்மனை வழிபடுவதால் தொழிற்தடைகள் விலகி தொழிற் விருத்தியாகும். தடங்கலான காரியம் தடங்கலான காரியம் தடங்கல் விலகி காரிய சித்தி உண்டாகும். சோழி மந்திரம் சொல்லும்போது திருமணத் தடைகள் விலகி குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். நம் மனையில் இலட்சுமி கடாட்சம் உண்டாகும்.

சோழியம்மனை வழிபடுவதற்கு நம் வீட்டில் காசியில் இருக்கும், சோழியம்மன் படத்தை வைத்து வழிபடலாம். அது கிடைக்கவில்லை என்றால் சோழிமுத்து ஐந்து அல்லது அதற்கு அதிமாகவே எடுத்து ஒரு மண் அகலில் வைத்து வழிபடவேண்டும். வெற்றிலையோடு கடல் சார்ந்த பொருட்கள், சோழி, சங்கு, சிப்பி, முத்து இவைகளோடு தேங்காய், வாழைப்பழம், அவல், பொரி, நிலக்கடலை, பச்சைப்பயிறு நாட்டுச் சர்க்கரை மரிக்கொழுந்து, மல்லிகைப்பூ, இவைகளை வைத்து வழிபடவேண்டும். சோழியம்மன் மந்திரம் சொல்லி எந்த காரியம் நடக்க வேண்டுமோ அந்தக் காரியம் முழுமையாக வெற்றிபெறும். விவசய விருத்தி உண்டாகும், விளைச்சல் அதிகமாக விளையும், வெண்கல மணி ஓசைகளை ஒலித்து சோழியம்மன் மந்திரத்தைச் சொல்லி பூசை செய்ய வேண்டும். அனைத்துக் காரியங்களையும் வெற்றி பெறச் செய்யும். நாம் சைவ பொருள்களோடு பூசை செய்ய வேண்டும்.

சோழியம்மனுக்கு உயிர்ப்பலியோ அசைவப் பொருள்களோ கொடுக்கக் கூடாது. அசைவப் பலி சோழியம்மன்னுக்குக் கொடுத்தால் தரித்தரமும், சாபமும் நம்மை வந்து சேரும். முழு பக்தியொடும், முழுமனதோடும் நாம் வழிபட வேண்டும்.

## சோழியம்மன் மந்திரம்

*ஓம் சல்சல் சல சல கருஞ்சோழி,*
*வெண்சோழி, மஞ்சள் சோழியம்மா,*
*வாக்குத்தாயே, வாடான ரீயே, சோக்கு,*
*சோக்கு, பிரசன்னம் தாக்கு தாக்கு, மச்ச*
*குறி தப்பாது மதியில் வந்து சொல்லு, வச்ச*
*குறி தப்பாது மதியில் வந்து மெல்லு, கச்ச*
*குறி தப்பாது காதில் வந்து சொல்லு, வட*
*வட ரீம் ரீம் சோழியம்மா க்ரீம்,கீராம் க்ரேம்*
*வாக்கு சொல்லு நாக்கில் வந்து வாக்காக*
*வசியமாய் நில்லு*
*சர்வ காரியமும் ஜெயமாக,*
*சர்வ தடைகளும் விலகி ஓட*
*ஓம் சோழியம்மாத் தாயே! கூம்பட் சுவாகா!*

சோழியம்மன் யந்திரத்தை மரப்பலகையில் வரைந்து கொள்ள வேண்டும்.

இந்த யந்திரத்தில் சோழியம்மன் மந்திரத்தைச் சொல்லி பூசைச் செய்து நாம் நினைத்த காரியங்களைச் சொல்ல வேண்டும். நம் காரியங்களைச் யந்திரம் உள்வாங்கி பலமடங்கு நன்மையான காரியங்களை நமக்கு கொடுக்கும். நம் சித்தர்களும், நம் முன்னோர்களும் கற்றுக் கொடுத்த நம் தெய்வ வழிபாட்டையும் தெய்வக் கலாச்சாரத் தையும் கடைபிடித்து நம் ஆன்மாவை உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்வொம்.

## சிவன் மந்திரம்

சொக்கர் நெடுவானில் திங்கள் நிலாத் துளும்பி
உக்கதெனச் சடைமேல் உம்பர் நீர் மிகக்
கொழுகும் வெள்ளைத்தான் - வெள்ளி
நெடுங்கிரியான் -மெய்யன்பர் உள்ளத்தான்
எங்கட் குலன்

## விஷ்ணு மந்திரம்

ஆதித் தனிக் கோலம் ஆனான் - அடியவற்காக
சோதி திருத்தூணில் தோன்றினான்
வேதத்தின் முன் நின்றான் - வேழம் முதலே
என அழைப்ப எங்கென்றான்
எங்கட்கிறை









## SP Dr.R.ஸ்டாலின் IPS அவர்களின் முன்னெடுப்பான

# பெரும் வரவேற்பை பெற்ற No Helmet, No Entry

மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்று வரும் கன்னியாகுமரி SP Dr.R.ஸ்டாலின் IPS அவர்களின் முன்னெடுப்பான No Helmet, No Entry. அதன் தொடர்ச்சியாக கன்னியாகுமரி உட்கோட்ட போக்குவரத்து போலீசார் இருசக்கர வாகனத்தில் No Helmet, No Entry இந்த விழிப்புணர்வு பேரணியை நடத்தினர். இந்த விழிப்புணர்வு பேரணியை நாகர்கோவில் மதுவிலக்கு பிரிவு காவல்துறை துணை கண்காணிப்பாளர் திரு.ராஜா, கன்னியாகுமரி போக்குவரத்து காவல் ஆய்வாளர் திரு.செல்லதுரை ஆகியோர் துவங்கி வைத்தனர். காவல்துறை எடுக்கும் முயற்சிகளுக்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு அளிக்க மாவட்ட காவல்துறை சார்பாக கேட்டுக்கொள்ளப்பட்டது.

**தலைமை நிருபர்: J.ஜெயவேல்முருகன், நாகர்கோவில்.**





# ரத்ததான முகாம்

ஈரோடு மாவட்டம், கவுந்தப்பாடி ரோட்டரி சங்கம் எல்லிஸ் பேட்டை பாரதிதாசன் கலை அறிவியல் கல்லூரி ரத்ததான சங்கம் மற்றும் ரோட்டராக்ட் சங்கம் இணைந்து நடத்திய ரத்ததான முகாம் பாரதிதாசன் கல்லூரியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், பாரதிதாசன் கல்லூரி மாணவ மாணவிகள், பேராசிரியர்கள், பணியாளர்கள், கவுந்தப்பாடி ரோட்டரி சங்க உறுப்பினர்கள் என 50–க்கும் மேற்பட்டோர் ரத்த தானம் செய்தனர்.

கோபி அரசு மருத்துவமனை ரத்த வங்கி செவிலியர்கள், பாரதிதாசன் கல்லூரி நிர்வாகத்தினர், கவுந்தப்பாடி ரோட்டரி சங்கத்தினர் ஆகியோர், இந்த நிகழ்வை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

நிருபர்: JC.கவுந்தி கண்ணன், ஈரோடு









செய்திகள் மற்றும் விளம்பரங்கள் அனுப்ப:

editorpoliceparvai@gmail.com

செயல் அலுவலகம்: 14, 2-வது மாடி, எண்.4, MRG காம்ப்ளக்ஸ், போலீஸ் ஸ்டேஷன் அருகில், மெயின்ரோடு, எடமலைப்பட்டிபுதூர், திருச்சி - 620 012. 9789491438

# 80 வயது சுவர்

## வயதாவதை பயத்துடன் அல்லாமல் கருணை, ஞானத்துடனும் ஏற்றுக்கொள்வோம்

உளவியலாளர் ஹிடேகி வாடா ‘80 வயதுச் சுவர்’ என்ற புத்தகத்தை வெளியிட்டுள்ளார். புத்தகம் வெளியான உடனேயே, அதன் விற்பனை 500,000 பிரதிகளுக்கு மேல் சென்றது, இது அந்த நேரத்தில் அதிகம் விற்பனையான புத்தகமாக மாறியது.

இந்த விற்பனைப் போக்கு தொடர்ந்தால், இந்தப் புத்தகம் 1 மில்லியனுக்கும் அதிகமான பிரதிகள் விற்பனையாகி, ஜப்பானின் அதிகம் விற்பனையாகும் புத்தகமாக மாறும்.

61 வயதான டாக்டர் வாடா, முதியோரின் மன நோய்களில் நிபுணத்துவம் பெற்ற ஒரு மருத்துவர். 80 வயதுடையவர்களுக்கான ஒரு அதிர்ஷ்டமான வாழ்க்கையின் ரகசியங்களை அவர் 44 வாக்கியங்களில் சுருக்கமாகக் கூறியுள்ளார்,

அவை கீழே பட்டியலிடப்பட்டுள்ளன:

1. தொடர்ந்து இயங்கிக்கொண்டே இருங்கள்.
2. கோபம் வரும்போது ஆழமாக மூச்சு விடுங்கள்.
3. உங்கள் உடல் இறுகிப் போகாதபடி போதுமான உடற்பயிற்சி செய்யுங்கள்.
4. கோடை காலத்தில் ஏர் கண்டிஷனர் பயன்படுத்தும்போது அதிக தண்ணீர் குடியுங்கள்.
5. நீங்கள் எவ்வளவு அதிகமாக மென்று சாப்பிடுகிறீர்களோ, அவ்வளவு அதிகமாக உங்கள் மூளையும் உடலும் சுறுசுறுப்பாக இருக்கும்.
6. ஞாபக மறதிக்குக் காரணம் வயதல்ல, மூளையைப் பயன்படுத்தாததே ஆகும்.
7. அதிகப்படியான மருந்துகளை உட்கொள்ளத் தேவையில்லை.
8. இரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரையை தேவையில்லாமல் குறைக்கத் தேவையில்லை.
9. தனியாக இருப்பது தனிமையல்ல; அது அமைதியாக நேரத்தைச் செலவிடுவது.
10. சோம்பல் ஒரு அவமானமல்ல.
11. உங்களுக்குப் பிடித்ததைச் செய்யுங்கள்; பிடிக்காததைச் செய்யாதீர்கள்.
12. இயற்கையான ஆசைகள் முதுமையிலும் நீடிக்கின்றன.
13. எந்தச் சூழ்நிலையிலும், எல்லா நேரமும் வீட்டிலேயே உட்கார்ந்திருக்க வேண்டாம்.
14. உங்களுக்குப் பிடித்ததைச் சாப்பிடுங்கள்; லேசான உடல் பருமன் நல்லது.
15. எல்லாவற்றையும் கவனமாகச் செய்யுங்கள்.
16. உங்களுக்குப் பிடிக்காதவர்களுடன் பழக வேண்டாம்.
17. எல்லா நேரமும் தொலைக்காட்சி பார்க்க வேண்டாம்.
18. நோயுடன் போராடுவதற்குப் பதிலாக, அதனுடன் வாழக் கற்றுக்கொள்ளுங்கள்.
19. “வண்டி மலைக்குச் சென்றதும், பாதை தெரியும்” – இது முதியோருக்கான மகிழ்ச்சியின் மந்திரச் சொல்.
20. புதிய பழங்கள் மற்றும் சாலட்களைச் சாப்பிடுங்கள்.
21. குளியல் நேரம் 10 நிமிடங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.



22. உங்களுக்குத் தூக்கம் வரவில்லை என்றால், உங்களை நீங்களே கட்டாயப்படுத்திக் கொள்ளாதீர்கள்.
23. மகிழ்ச்சியைத் தரும் செயல்கள் மூளையின் செயல்பாட்டை அதிகரிக்கின்றன.
24. நீங்கள் உணர்ந்ததைச் சொல்லுங்கள்; அதிகமாக யோசிக்காதீர்கள்.
25. கூடிய விரைவில் ஒரு “குடும்ப மருத்துவரைக்” கண்டறியுங்கள்.
26. அதிக பொறுமையுடனும் இருக்க வேண்டாம், அதிக பிடிவாதமாகவும் இருக்க வேண்டாம்; ஒரு “துணிச்சலான மூத்தவராக” இருப்பதும் தவறில்லை.
27. சில சமயங்களில் உங்கள் மனதை மாற்றிக்கொள்வது பரவாயில்லை.
28. வாழ்க்கையின் இறுதி கட்டங்களில், மறதி நோய் என்பது கடவுளின் ஒரு வரம்.
29. நீங்கள் கற்றுக்கொள்வதை நிறுத்தினால், நீங்கள் வயதாகிவிடுவீர்கள்.
30. புகழுக்காக ஏங்காதீர்கள்; உங்களிடம் இருப்பது போதுமானது.
31. அப்பாவித்தனம் முதியோருக்கானது.
32. ஒரு விஷயம் எவ்வளவு கடினமாக இருக்கிறதோ, அது அவ்வளவு சுவாரஸ்யமாக மாறும்.
33. சூரியக் குளியல் மகிழ்ச்சியைத் தருகிறது.

34. மற்றவர்களுக்குப் பயனளிக்கும் காரியங்களைச் செய்யுங்கள்.

35. இன்றைய நாளை வசதியாகச் செலவிடுங்கள்.

36. ஆசைதான் நீண்ட ஆயுளுக்கான திறவுகோல்.

37. மகிழ்ச்சியாக வாழுங்கள்.

38. எளிதாக சுவாசியுங்கள்.

39. வாழ்க்கையின் கோட்பாடுகள் உங்கள் கைகளிலேயே உள்ளன.

40. எல்லாவற்றையும் அமைதியாக ஏற்றுக்கொள்ளுங்கள்.

41. மகிழ்ச்சியானவர்களை அனைவரும் நேசிக்கிறார்கள்.

42. ஒரு புன்னகை நல்ல அதிர்ஷ்டத்தைத் தருகிறது.

வயதாவதென்பது ஒரு வரம்பு அல்ல. அது ஒரு வரம். சரியான கண்ணோட்டத்துடனும் தினசரி பழக்கவழக்கங்களுடனும், 60 வயதுக்கு பிந்தைய ஆண்டுகள் உங்கள் வாழ்க்கையின் மிகவும் பயனுள்ள ஆண்டுகளில் சிலவாக இருக்கலாம்.

வயதாவதை பயத்துடன் அல்லாமல், கருணையுடனும், நன்றியுடனும், டாக்டர் வாடா தாராளமாகப் பகிர்ந்துகொண்ட ஞானத்துடனும் ஏற்றுக்கொள்வோம்.

# திருச்சி பொதுமக்கள் தவறவிட்ட செல்போன்களை மீட்டுகொடுத்த காவல் துறை



*திருச்சி மாநகரில் பொதுமக்கள் தவறவிட்ட ரூ.21,00,000/– மதிப்புள்ள 142 செல்போன்கள் மீட்கப்பட்டு, அதன் உரியவர்களிடம் திருச்சி மாநகர காவல் ஆணையர் திருமதி.N.காமினி IPS அவர்கள் ஒப்படைத்தார்.*

தலைமை நிருபர்: M.பாண்டியாஜன், திருச்சி.



# திருநெல்வேலி மாநகர காவல் ஆணையர் N.மணிவண்ணன் IPS மேற்பார்வையில்

# சீருடை பணியாளர்கள் தகுதி தேர்வு

தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வாணையம் (TNUSRB) நடத்தும், 2025–ம் ஆண்டிற்கான இரண்டாம் நிலை காவலர்கள்/ சிறை காவலர்கள் பதவிகளுக்கான உடல் தகுதி தேர்வு மற்றும் உடல் திறனாய்வு தேர்வு, திருநெல்வேலி மாவட்ட ஆயுதப்படை கவாத்து மைதானத்தில் திருநெல்வேலி மாவட்ட தேர்வு மையத்திற்காக சிறப்பு கண்காணிப்பு அலுவலராக நியமிக்கப் பட்டுள்ள மாநகர காவல் ஆணையர் முனைவர் N.மணிவண்ணன் IPS அவர்கள் மேற்பார்வையில், மாநகர காவல் துணை ஆணையர் திரு.S.விஜயகுமார் (தலைமையிடம்) அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் உடல் தகுதி தேர்வு ஆகியவற்றில் தேர்ச்சி பெற்ற 590 விண்ணப்பதாரர்களில் 587 விண்ணப்பதாரர்கள் உடல் திறனாய்வு தேர்வில் (100 மீட்டர் ஓட்டப்பந்தயம், நீளம் தாண்டுதல் மற்றும் பந்து எறிதல்) கலந்து கொண்டனர்.

நிருபர்: R.ஜோதிபாசு, திருநெல்வேலி.












# அரியயலூர் மாவட்டத்தில் போதைப் பொருளின் தீமை குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி

அரியலூர் மாவட்ட காவல்துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை மற்றும் வருவாய்த்துறை இணைந்து நடத்தும் போதைப் பொருள் விழிப்புணர்வு நிகழ்ச்சி 30.01.2026 அன்று அரியலூர் பேருந்து நிலையம் அருகே நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.P.இரத்தினசாமி IAS அவர்கள் கலந்து கொண்டு போதைப் பொருள்களுக்கு எதிராக விழிப்புணர்வு ஏற்படுத்தி, போதைப் பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை பேருந்து மற்றும் ஆட்டோவில் ஒட்டினார்.

நிருபர்: R.தங்கபாண்டியன், அரியலூர்.



## தென்காசி SP திரு.G.S.மாதவன் T.P.S. அவர்கள் தலைமையில்

# தீண்டாமையை ஒழிப்பு உறுதிமொழி

தென்காசி மாவட்ட காவல் அலுவலகத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.G.S.மாதவன் T.P.S. அவர்கள் தலைமையில் காவல் ஆளிநர்கள், அமைச்சுப் பணியாளர்கள் தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். இதேபோல மாவட்டத்தில் உள்ள அனைத்து காவல் நிலையங்களிலும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இந்த உறுதிமொழியில் இந்திய அரசியலமைப்பின்பால் இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்திய குடிமகன்/ குடிமகன் ஆகிய நான் நமது அரசியலமைப்பின் படி தீண்டாமை ஒழிக்கப்பட்டு விட்டது என்பதை அறிவேன்.

தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமாற உறுதியளிக்கின்றேன்.

அரசியலமைப்பின் அடிப்படை கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும் உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியலமைப்பின்பால் எனக்குள்ள முழுபற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக் காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன் என்று உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

நிருபர்: P.அண்ணாமலை, தென்காசி.



## திருநெல்வேலியில் சாலை பாதுகாப்பு மாதத்தை முன்னிட்டு

# இரு சக்கர வாகன விழிப்புணர்வு பேரணி

## காவல் ஆணையர் திரு.N.மணிவண்ணன் IPS தொடக்கி வைத்தார்

சாலை விபத்துக்களை தடுக்கும் பொருட்டு ஆண்டுதோறும் ஜனவரி மாதம் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு மாதமாக கடை பிடிக்கப்படுகிறது, அதன் அடிப்படையில் இரு சக்கர வாகனங்கள் ஓட்டுபவர்கள் கட்டாயம் தலைக்கவசம் அணிந்து வாகனத்தை இயக்குவதற்கான விழிப் புணர்வு பேரணி பாளையங்கோட்டை பேருந்து நிலையத்திலிருந்து திருநெல்வேலி டவுண் ஆர்ச் வரை நடைபெற்றது. பேரணியை திருநெல்வேலி மாநகர காவல் ஆணையர் முனைவர் N.மணி வண்ணன் IPS. அவர்களால் கொடியசைத்து துவக்கி வைத்தார். மேலும் தலைக்கவசம் அணிந்து வந்தவர்களுக்கு மரங்கன்றுகள் கொடுத்தும், தலைக்கவசம் அணியாமல் வந்த வாகன ஓட்டிகளுக்கு அறிவுரைகள் கூறி, அவர்களுக்கு தலைக்கவசத்தை காவல் ஆணையர் அவர்கள் வழங்கினார்கள்.


இந்நிகழ்வில் மாநகர காவல் உதவி ஆணையர்கள், காவல் ஆய்வாளர்கள், காவல் துறை அதிகாரிகள், ஆளினர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

நிருபர்: R.ஜோதிபாசு, திருநெல்வேலி









## வாயு முத்திரை

**சுட்டு விரலின் நுனியைப் பெருவிரலின் அடியில் வைத்துச் சுட்டு விரலின் பின்புறத்தைப் பெரு விரலால் பூப்போல அழுத்திப் பிடிக்கவும். மற்ற விரல்கள் நீட்டிக் கொண்டிருக்க வேண்டும். வாயு சம்பந்தமான நோய்கள் 10 நாட்களில் இம்முத்திரையைச் செய்ய அகலுகின்றன. அதிகப்படியான வாயு கலைகிறது. உடல் வலி குறைகிறது. கழுத்துவலி அகலும். சம்மணங்காலிட்டு தினமும் 10 நிமிடம் செய்க. (இரண்டு கைகளிலும் செய்க...)**



## வாளையார் சோதனைச் சாவடியில்

# உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு வரப்பட்ட 6 கிலோ 140 கிராம் தங்கக் கட்டிகள் பறிமுதல்

கோவை மாவட்டம், வாளையார் சோதனைச் சாவடியில் ஆய்வாளர் திரு.சண்முகம், உதவி ஆய்வாளர் திரு.திருமலைசாமி மற்றும் காவல் துறையினர் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது, பாலக்காட்டிலிருந்து கோவை நோக்கி வந்த பேருந்தில் சோதனை மேற்கொள்ளப்பட்டது. சோதனையின் போது, நிபின்(29) என்பவர், மறைத்து வைத்திருந்த 6 கிலோ 140 கிராம் எடையுள்ள தங்கக் கட்டிகள் உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு




வரப்பட்டதை கண்டறிந்து பறிமுதல் செய்தனர்.

மேலும், அவரிடம் மேற்கொண்ட விசாரணையில், நிபின் கேரள மாநிலம் எர்ணாகுளம் மாவட்டத்தில் உள்ள துணிக் கடையில் பணிபுரிந்து வருவதாகவும், கடை உரிமையாளர் ரஹ்மான்(42), மேற்கண்ட தங்கக் கட்டிகளை கோவை உக்கடம் பகுதியைச் சேர்ந்த சுரேஷ் என்பவரிடம் ஒப்படைக்க கொடுத்ததாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.Dr.K.கார்த்திகேயன் IPS அவர்களின் உத்தரவின் பேரில், மேற்படி சோதனை சாவடியில் உரிய ஆவணங்கள் இன்றி கைப்பற்றப்பட்ட தங்கக் கட்டிகள் மேல் நடவடிக்கைக்காக வருமான வரித்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

கோவை மாவட்ட காவல்துறை சார்பாக, சட்ட விரோதமான கடத்தல் மற்றும் ஆவண மின்றி கொண்டு செல்லப்படும் பொருட்கள் தொடர்பாக தொடர்ந்து தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், பொதுமக்கள் காவல்துறைக்கு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.

நிருபர்: P.நடராஜ், கோவை.

## வேட்டவலம் பேரூராட்சியில்

# திருவள்ளுவர் தின விழா

உலகத்திருக்குறள் கூட்டமைப்பின் திருவண்ணாமலை மாவட்ட கீழ்பெண்ணாத்தூர் ஒன்றிய வேட்டவலம் பேரூராட்சியில் திருவள்ளுவர் தின விழா கொண்டாடப்பட்டது.


தலைமைத் துறை இயக்குநர் ஆ.லியோ கிளமண்ட் திருவண்ணாமலை மாவட்டத் துணைத் தலைவர் சு.பச்சையம்மாள் ஆகியோரின் முன்னேற்பாட்டின்படி உலகத் திருக்குறள் கூட்டமைப்பு, இயற்கை விவசாய சங்கம், அரிமா சங்கம், அரங்கநாதன் செங்கழனி அரங்க கிருஷ்ணன் அறக்கட்டளை உடன் இணைந்து அரசு ஆண்கள் மேல் நிலைப்பள்ளி வேட்டவலத்தில் நடைபெற்றது.

விழாவுக்கு தலைமைஆசிரியர் ந.பிரியதர்சினி தலைமை தாங்கினார். திருக்குறள் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

வேட்டவலம் பேரூர் உலகத்திருக்குறள் கூட்டமைப்பின் செயலூக்க உறுப்பினர்களாகிய செயலாளர், பொருளாளர் சிவா, அ.டேவிட், இரா.சக்திவேல் மற்றும் நகரத்தில் உள்ள முக்கிய ஆலோசகர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கி சிறப்பித்தனர். அரங்க நாராயணன் நன்றி கூறினார். இந்த விழாவை கவிஞர் முகில்வண்ணன் ஒருங்கிணைத்தார்.

**சிறப்பு நிருபர்: இரா.சக்திவேல், வேட்டவலம்.**





**தகுதி எனவொன்று நன்றே பகுதியால்**

**பாற்பட்டு ஒழுகப் பெறின். (111)**

விளக்கம்: பகைவர், நண்பர், அயலார் என்னும் பிரிவினர் தோறும் நீதி தவறாது பின்பற்றப்படுமானால் நடுவுநிலைமை என்று சொல்லப்படும் ஓர் அறம் மட்டுமே வாழ்க்கைக்குப் போதும்.




# தமிழக அரசு ஊழியர்களின் முக்கிய அரசாணைகள்

(1) பெண் அரசு ஊழியர்களை அலுவலக நேரத்திற்கு முன்னும், பின்னும் அவசியமிருந்தாலொழிய நிறுத்தி வைத்து வேலை வாங்கக்கூடாது (RG. 1984.P.278)

(2) கலப்பு திருமணம் செய்து கொள்பவர்களுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு பெற்றோரின் விருப்பப்படி எவரேனும் ஒருவரின் ஜாதி அடிப்படையில் ஜாதி சான்றிதழ் பெற்றுக் கொள்ளலாம். (அரசாணை எண். 477/ சமூக நலத்துறை, நாள் – 27.6.1975)

(3) அரசு ஊழியர்களின் மனைவி, கணவர், மக்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் பெயரில் அவர்களுடைய சொந்த வருமானத்தை கொண்டு (அரசு ஊழியரின் வருமானம் இன்றி) சொத்து வாங்க அனுமதி தேவையில்லை. பணிப்பதிவேட்டில் குறிக்கப்பட்ட வேண்டியதுமில்லை. (அரசாணை எண். 3158/பொதுப்பணியாளர்கள் /துறை. நாள்–27.9.1974)

(4) அரசு பணியாளர்கள் நடத்தை விதிகள்படி அரசு ஊழியர்கள் அசையாச் சொத்து, அசையும் சொத்து ஆகியவற்றை கடனாக மற்றும் பரிசுப் பொருட்களாக வாங்கும்போது மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் குறித்த ஆணைகள் (ஆணை எண். 45679/A2/1996, நாள்–17.4.1996)

(5) மகப்பேறு விடுப்பிலிருந்து திரும்பும் பணியாளரை முடிந்தவரை அதே இடத்தில் பணி அமர்வு செய்ய வேண்டும். (அரசு கடித எண். 2290/93–1, நிர்வாகத்துறை, நாள் – 18.6.1993)

(6) அரசு ஊழியர் ஒருவர் Private Study பயில்வதற்கு துறைத் தலைவர் அனுமதி பெற வேண்டும். (G. O. Ms – 362, P&A. R, DT – 4.11.1992)

(7) தன் சொந்த செலவில் உயர்கல்வி பயில விரும்பும் அரசு ஊழியர் மாவட்ட அளவிலான உயர் அதிகாரியிடம் அனுமதி பெற வேண்டும். (அரசாணை எண். 362, நிர்வாகத்துறை, நாள்: 4.11.1992, மற்றும் அரசு கடித எண் 99147/பணி–ஏ/93, நாள்: 22.6.1993)

(8) மாலை நேரக் கல்வி பயில துறைத்தலைவரின் அனுமதி தேவை. (அரசாணை எண் 1341,பொது, நாள்: 27.8.1993 மற்றும் அரசு கடித எண். 98189/84–8, நிர்வாகத்துறை, நாள்: 13.8.1983)

(9) அரசு ஊழியர் ஒருவர் மாலை நேரக் கல்லூரி மற்றும் தபால் மூலம் கல்வி (Correspondence Course) பயில அனுமதி கோரி விண்ணப்பித்த நாளிலிருந்து 15 நாட்களுக்குள் எவ்வித பதிலும் கிடைக்கப்பெறாவிட்டால் அனுமதி கிடைத்ததாக கருதி கல்வியினை தொடரலாம். (அரசாணை எண். 200, நிர்வாக சீர்திருத்த துறை, நாள்: 19.4.1996)

**P.பார்த்திபன்** M.Com., B.L.,

Owned and Published by N.Balakrishnan from 4B, GD.Floor, 4th Block, Adilti Paradise,
No.1, 2nd North Street, Poombuhar Nagar Kolathur, Chennai-600 099. and Printed him at.Meeraoffset printers
No.104, V.R.Pillai Street, Triplicane, Chennai-600 005. Editor: **N.BALAKRISHNAN**




11-வது தேசிய அளவிலான ஏரோஸ்கேட்டோபால் ஸ்கேட்டிங் விளையாட்டு போட்டி

# சாம்பியன் பட்டம் வென்ற தமிழக வீரர்கள், வீராங்கனைகள்

மஹாராஷ்டிரா மாநிலம் ஷீரடியில் ஜனவரி 31, பிப்ரவரி 1 ஆகிய 2 நாட்கள் நடைபெற்ற 11–வது தேசிய அளவிலான ஏரோஸ்கேட்டோபால் ஸ்கேட்டிங் விளையாட்டு போட்டியில் அனைத்து பிரிவுகளிலும் தமிழ்நாட்டிலிருந்து திருச்சி, சிவகங்கை, நாமக்கல், அரியலூர் போன்ற பல மாவட்டங்களில் இருந்து 60–க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

தேசிய அளவிலான இப்போட்டியில் மஹாராஷ்டிரா, ஹரியானா, ஆந்திர பிரதேசம், ராஜஸ்தான் போன்ற 10–க்கும் அதிகமான மாநிலங்களிலிருந்து ஸ்கேட்டிங் விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகள் திரளாக வந்து கலந்து கொண்டனர்.

அனைத்து பிரிவுகளிலும் தமிழ்நாடு மாணவ, மாணவிகள் சிறப்பாக விளையாடி தேசிய அளவிலான ஒட்டு மொத்த தங்க கோப்பையை கைப்பற்றி முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளனர்.

தமிழ்நாடு ஏரோஸ்கேட்டோபால் சங்க தலைவர் ராகேஷ் சுப்பிரமணியன் தலைமையில் சர்வதேச பயிற்சியாளர்கள் பிரவீன் ஜான்சன் மற்றும் அமல் ஜோயல் வழிகாட்டுதலின்படி தமிழ்நாடு ஸ்கேட்டிங் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் இச்சாதனையை படைத்து தமிழ் மண்ணுக்கு பெருமை சேர்த்துள்ளனர்.



Posted at - patrikachannel Egmore Date of publication Everymonth 1st week.
POLICE PARVAI TAMIL MONTHLY R.Dis.No.1132/2015 RNI. TNTAM/2015/66520

அரவணைக்கும் அரண்மனை அறக்கட்டளை

அறமும் அன்பும் இரு கண்கள்

ஆதரவற்ற குழந்தைகள், முதியோர்களுக்கு
முற்றிலும் இலவச சேவை

எண்.30/2, சஹாய மாதா கோவில் தெரு, மலையடிவாரம், பொன்மலை,
திருச்சி - 620004 ✆ 98948 90808




AEROSKATOBALL ASSOCIATION OF TAMILNADU
Affiliated to :
AEROSKATOBALL FEDERATION OF INDIA

No.30/2, Shagayamatha Kovil Street,
Malaiadivaram, Ponmalai, Trichy-4

FIT INDIA

Email : aeroskatoballtrichy@gmail.com
Cell : 9943805636, 9003096846

4B, GD. Floor, 4th Block Adilti Paradise,
No.1, 2nd North Street, Poombuhar Nagar,
Kolathur, Chennai - 600 099.
Cell: 97 89 49 14 38, 766 755 1542

TO